விலை: 50.00
பக்கங்கள் : 24
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி .001 வள்ளுவர் ஆண்டு 2053 மார்கழி 05 செவ்வாய்க்கிழமை (20.12.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

### 23ஆவது ஆண்டு நிறைவு

# சமூகப் பொறுப்பும் தர்மமும் வலம்புரியின் தனித்துவம்

## கலாநிதி ஆறு.திருமுருகன் புகழாரம்



(யாழ்ப்பாணம்)

சமூகப் பொறுப்பும் பத்திரிகைத் தர்மமும் அறக் கருத்துக்களை வலியுறுத்தும் சிறப்பும் வலம்புரி பத்திரிகையின் தனித்துவம் என சிவபூமி அறக்கட்டளையின் ஸ்தாபகரும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவருமான செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் புகழாரம் சூட்டியுள்ளார்.

வலம்புரி நாளிதழின் 23 ஆவது அகவை நிறைவை ▷23

**வலம்புரிக்கு 23**
**இன்று அகவை**

அன்பு வாசகர்களே! உங்கள் வலம்புரிக்கு இன்று அகவை 23. வலம்புரியுடன் பயணித்துவரும் அன்பு வாசகர்கள், மதிப்பார்ந்த விளம்பரதாரர்கள், வர்த்தகப் பெருமக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் என்றும்உங்கள்பேராதரவை வேண்டிநிற்கின்றோம்.

**வலம்புரிக் குடும்பம்**

### தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள

# பிரச்சினைகளை தீர்த்து வையுங்கள்

## எரிக் சொல்ஹெய்மிடம் கூட்டமைப்பு எடுத்துரைப்பு

(கொழும்பு)

தமிழ் மக்கள் நீண்டகாலமாக எதிர்கொண்டுள்ள அரசியல் மற்றும் பொருளாதார பிரச்சினையை தீர்த்து வையுங்கள் என எரிக் சொல்ஹெய்மிடம் கூட்டமைப்பினர் எடுத்துரைத்துள்ளனர். *(23ஆம் பக்கம் பார்க்க)*



# உள்நாட்டு வருவாய் சட்டம் அமுலானது

## சபாநாயகர் கையொப்பமிட்டார்

(கொழும்பு)

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன கையொப்பமிட்ட நிலையில் உள்நாட்டு ▷23

# இலங்கை எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலை தொடர்பில்

## எரிக் சொல்ஹெய்முடன் ஜனாதிபதி கலந்துரையாடல்



(கொழும்பு)

இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் மற்றும் அவற்றிலிருந்து மீள்வதற்கான போராட்டங்களில் சூரியசக்தி, காற்று சக்தி ▷23

# விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை

(கொழும்பு)


2021 - 2022 பெரும் போகத்தில் பயிர்ச்செய்கைக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்காக விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க விவசாய மற்றும் விவசாய பாதுகாப்புச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி, அரசாங்கத்தினால் 657 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வேலைத் திட்டத்தின் கீழ் 31, ▷23

# ஐ.நா வதிவிட பிரதிநிதியுடன் ஜனாதிபதி கலந்துரையாடல்





(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட இணைப்பாளர் ஹனா சிங்கர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ▷23

### ரூ.500 கோடி

# பெறுமதியான சீருடை வழங்கிய சீன அரசு

(கொழும்பு)

2023ஆம் ஆண்டில், இலங்கை பாடசாலை மாணவர்களின் 70 சதவீத சீருடைத் தேவை ▷23

### மக்கள் ஆதரவு இல்லாததால்

# சர்வதேச அங்கீகாரம் அரசுக்கு கிடைக்காது

## பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைப்பது வெறும் கானல் நீராகவே காணப்படுகிறது.

மக்களாதரவு இல்லாத இந்த அரசாங்கத்திற்கு சர்வதேச அங்கீகாரம்கிடைக்காது இதன் காரணமாகவே தேர்தலை நடத்துமாறு ▷23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களது உரிமைகளை பறித்து வழங்கப்பட்டதே இலங்கையின் சுதந்திரம்

## சிறிதரன் எம்.பி தெரிவிப்பு



தமிழர்களது சுதந்திரத்தையும் அவர்களின் இறைமையையும் பறித்து இலங்கையில் தமிழர்களது உரிமைகளையும் சேர்த்து பிரித்தானிய அரசால் வழங்கப்பட்டதே இலங்கைக்கான சுதந்திரம் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்ற இலங்கை தமிழரசு கட்சியின் 75ஆவது ஆண்டு தொடக்க விழாவில் கலந்து கொண்டு இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

மேலும், "சமஸ்டி முறையிலான ஆட்சி முறை உருவாக்கப்பட வேண்டுமெனவும் அது இலங்கையில் தமிழ் சிங்கள மக்களை பாதிக்காது நாட்டை சரியாக கொண்டு செல்ல வேண்டும் எனவும் தந்தை செல்வா 1948ஆம் ஆண்டிலே விடுதலைக்கான ஓர் பயணத்தை ஆரம்பித்தார்." என தெரிவித்திருந்தார். (ம-7)

# வியட்நாமில் உயிரிழந்த சாவகச்சேரியைச் சேர்ந்த குடும்பஸ்தரின் சடலம் நல்லடக்கம்



(சாவககச்சேரி)

வியட்நாமில் உயிரிழந்த சாவகச்சேரியை சேர்ந்த குடும்பஸ்தரின் சடலம் நேற்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

சட்டவிரோதமாக படகு மூலம் கனடா செல்ல முயற்சித்த போது, படகு பழுதடைந்த நிலையில், கடந்த மாதம் 08 ஆம் திகதி 303 அகதிகளும் வியட்நாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இவ்வாறு வியட்நாம் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் இருவர், தங்களை நாட்டிற்கு திருப்பி அனுப்ப வேண்டாம் என தெரிவித்து கடந்த மாதம் 18 ஆம் திகதி தற்கொலைக்கு முயற்சித்தனர்.

இருவரும் வியட்நாமிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த 37 வயதான சுந்தரலிங்கம் கிரிதரன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

உயிரிழந்த சாவகச்சேரி, கல்வயல் பகுதியை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சுந்தரலிங்கம் கிரிதரனின் சடலம்,நேற்றுமுன்தினம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு நேற்று அவரின் இல்லத்தில் இறுதிக்கிரியைகள் இடம் பெற்று சாவகச்சேரி கண்ணாடிப்பெட்டி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. (ம-7)

# மனைவியை மண்வெட்டி பிடியால் அடித்துக் கொன்ற கணவன்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள கருப்பிடமலை நெவுண்டலியமடு வயல் பிரதேசத்தில் மது போதையில் மனைவியை மண்வெட்டி பிடியால் அடித்து கொலை செய்த கணவனை கைது செய்துள்ள சம்பவம் நேற்று இரவு இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கரடியன் குளத்தைச் சேர்ந்த 28 வயதுடைய 3 பிள்ளைகளின் தாயாரான ஜெயக்குமார் புவனேஸ்வரி என்பவரே இவ்வாறு சடலமாக மீட்டகப்பட்டுள்ளார்.

குறித்த வயல் பிரதேசத்தில் வேளாண்மை செய்துவரும் விவசாயி ஒருவரின் வயலுக்கு வேளாண்மை காவலுக்கு அமர்த்தப்பட்ட கரடியன் குளத்தை சேர்ந்த 3 பிள்ளைகளை கொண்ட வல்லிபுரம் ஜெயக்குமார் அவரது 10 வயதான மூத்த பிள்ளையை அவரது அம்மம்மாவுடன் தங்க வைத்து விட்டு அவரது மனைவியுடன் 5 மற்றும் 3 வயது குழந்தையுடன் வயலில் காவலுக்காக அமைக்கப்பட்ட குடிசையில் தங்கி வந்துள்ளார்.

இந்த நிலையில் சம்பவதினமான நேற்று இரவு வல்லிபுரம் ஜெயக்குமார் அவரது மனைவி ஆகிய இருவரும் மது அருந்திய நிலையில் இருவருக்குமிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றி சண்டையாக மாறியதையடுத்து அங்கிருந்த மண்வெட்டிப் பிடியினால் மனைவி மீது மேற்கொண்ட தாக்குதலில் மனைவி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம-7)

# பெரமுனவின் ஆயுட்காலம் நிறைவு சுதந்திரக் கட்சியை பலப்படுத்துவோம்

## தயாசிறி ஜயசேகர

தம்வசமிருந்த ஜனாதிபதி பதவியையும் , பிரதமர் பதவியையும் பறிகொடுத்து , அமைச்சுப் பதவிகளுக்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பின்னால் சென்று கொண்டிருக்கிறது. தற்போது பொதுஜன பெரமுனவின் ஆயுட்காலம் நிறைவடைந்துவிட்டது.

எனவே சுதந்திர கட்சியை மீளக்கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். (ம-7)


# மரண அறிவித்தல்

மலர்வு 25 . 07 . 1961



உதிர்வு 19 . 12 . 2022

## பொன்னையா இந்திரன்

(உரிமையாளர் – கஜமுகன் ஹாட்வெயார், நெல்லியடி)

துன்னாலை மேற்கு கரவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா இந்திரன் அவர்கள் நேற்று திங்கட்கிழமை (19.12.2022) அன்று காலமானார்.

காலஞ்சென்றவர்களான பொன்னையா - சீதாதேவி தம்பதிகளின் புத்திரனும் காலஞ்சென்ற செல்லத்துரை - சின்னம்மா .தம்பதிகளின் அன்பு மருமகனும் விமலாதேவியின் அன்புக் கணவரும் கிருஷா (பிரான்ஸ்), அமரர் இராகுலன், கோகுகலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜீவதாஸ்(பிரான்ஸ்) அன்பு மாமனாரும் இராஜேஸ்வரன்(அமரர்), இராஜேஸ்வரி(நோர்வே), இந்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் அக்ஷயா, பிரித்திக் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று காலை 8.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேரோண்டை இந்து மயானத்திற்கு காலை 10.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குலானை,
துன்னாலை மேற்கு,
கரவெட்டி.

தகவல்:-
குடும்பத்தினர்
077 524 4437

(C-5556)


# புலமைப்பரிசில் பரீட்சையை முடித்து வீடு சென்ற மாணவி

## கடத்தப்பட்டு காட்டுப் பகுதியில் கைவிடப்பட்டார்

புலமைப்பரிசில் பரீட்சையை முடித்துக் கொண்டு வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த மாணவியொருவர் கடத்தப்பட்டு காட்டுப்பகுதியில் கைவிடப்பட்டு சென்றுள்ளதாக அம்பன்பொல பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் புலமைப்பரிசில் பரீட்சை முடிந்து தனது நண்பர்களுடன் சிறிய லொறியில் அமுனுகம சந்திக்கு மாணவியொருவர் சென்றுள்ளார்.

குறித்த மாணவி அமுனுகமவில் உள்ள தனது வீட்டிற்கு நடந்து செல்லும் வழியில் மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் மாணவியை வீட்டில் இறக்கி விடுவதாக தெரிவித்து மோட்டார் சைக் கிளில் அழைத்து சென்றுள்ளார்.

இதனையடுத்து வீட்டின் அருகே சென்ற மோட்டார் சைக்கிள் சாரதி வீட்டை பார்த்ததும் வேறு திசையில் வாகனத்தை திருப்பி மாணவிக்கு பாடசாலை உபகரணங்களை வாங்கி தருவதாகக் கூறி அம்பன்பொல, எஹதுவே வீதிக்கு அழைத்து சென்றுள்ளார்.

இதன்போது பாடசாலைக்கு சென்று கொண்டிருந்த மற்றுமொரு மாணவனை கண்டதும் மோட்டார் சைக்கிளில் வந்த நபர் குறித்த மாணவியை காட்டு பகுதிக்கு அழைத்துச்சென்று இறக்கி விட்டு தப்பியோடியுள்ளார்.

கிராம மக்கள் சிறுமியின் தந்தையை அவ்விடத்திற்கு வரவழைத்து சிறுமியை ஒப்படைத்தனர். (ம-7)


மாபெரும் மலிவு விற்பனை

ஏசியன் தளபாட நிலையத்தின் வருட இறுதி மாபெரும் மலிவு விற்பனை

இன்றே நாடுங்கள்

அனைத்து பொருட்களிற்கும் விசேட விலைக் கழிவு

Sofa 3+1+1 = 78,900/=

Sofa 3+2+1 = 99,900/=



(13827)

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

077 358 3879, 076821 9416



# கண்ணீர் அஞ்சலி

கிளி/ பளை மத்திய கல்லூரியின் ஆசிரியரான திருமதி **கமலாதேவி புவனேந்திரன்** அவர்களின் பாசமிகு மாமியாரான

(13828)

அமரர் கதிரவேற்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை



அவர்கள் 11.12.2022 அன்று இறைபதமடைந்தமையையிட்டு அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்தஅனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்
கிளி/ பளை மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதில் பெரும் பங்காற்றி வருகிறது வலம்புரி

## யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர்

(யாழ்ப்பாணம்)

**எத்தனை இடர் சூழ்ந்தாலும் நன்னெறியில் நின்று என்றும் வலம்புரி தவறியதில்லை என யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர்.சி.சிறிசற்குணராஜா தெரிவித்தார்.**



வலம்புரிப் பத்திரிகையின் 23 ஆண்டுகள் நிறைவையொட்டி வழங்கிய வாழ்த்துச் செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இருபத்து நான்காவது ஆண்டுக்குள் காலடியெடுத்து வைக்கும் வலம்புரி நாளிதழை இந்நாளில் வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகிறேன். வலம்புரியும், அதன் சங்குநாதமும் இன்னும் பல ஆண்டுகள் இதே வேகத்துடனும் மிடுக்குடனும் திகழ வேண்டும் என வாழ்த்தி நிற்கிறேன்.

இலங்கையில், குறிப்பாக - யாழ்ப்பாணத்தில் ஒரு பத்திரிகை சில ஆண்டுகளைக் கடந்து பயணிப்பதென்பதும், நின்று நிலைப்பதென்பதும் மிகப் பெரும் சவாலானதொன்று. புறச் சூழலும், பொருளாதார நெருக்கடிகளும் அவை நின்று நிலைப்பதற்குத் தடையாக அமைந்து விடுகின்றன. ஆரம்பித்த வேகத்திலேயே அஸ்தமித்துப் போன பல பத்திரிகைகளை நாம் கண்டிருக்கிறோம்.

யாழ்ப்பாணத்தில் மட்டுமே பல பத்திரிகைகள் ஒரு பிரதேசத்திலிருந்து வெளிவருவதை நாம் காணலாம். இன்று கடைகளில் கிடைக்கும் பத்திரிகைகள் இன்னும் சில காலங்களில் காணாமல் போய்விடும். ஆனால் ஒரு சில பத்திரிகைகளே காலாதிகாலமாக மக்களோடு ஒன்றித்துப் பயணிக்கின்றன. அத்தகைய பத்திரிகைகளில் வலம்புரியும் ஒன்று.

ஆரம்பித்த நாள் முதல் வலம்புரி கடந்து வந்த பாதை கரடுமுரடானதாகவே இருந்து வந்துள்ளது. வாசகர் (மக்கள்) பலத்தோடு அத்தனை சவால்களையும் எதிர்கொண்டு - வெற்றிகரமாக முன்னேறியிருக்கிறது.

எந்த இடர் வந்தாலும் தன்னெறியில் நின்று வலம்புரி தவறியதில்லை. "நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் நாளிதழ்" என்பதை மகுட வாசகமாகச் சிர மேற்கொண்டு, நன்னெறி நின்று தன் நோக்கத்தை அடைவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது.

இந்து சமுத்திரத்தின் நித்திலம் என்று வர்ணிக்கப்படுகின்ற ஈழமணித் திருநாட்டின் சென்னியாகத் திகழ்கின்ற யாழ். மண்ணில் இருந்து சைவநெறி சார்ந்து நின்று வெளிவருகின்ற ஒரு பத்திரிகை வலம்புரி என்றால் அது மிகையாகாது.

யாழ்ப்பாண மண்ணில் சைவத்தையும், தமிழையும் வளர்ப்பதில் வலம்புரி பெரும் பங்காற்றி வருகிறது. யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளுள் வலம்புரியின் செல்நெறியே அதன் வெற்றிப் பயணத்துக்குக் காரணமாகும். தனக்கெனத் தனித்துவமான சில விடயங்களைத் தன்னிடத்தே கொண்டமைந்த வலம்புரியின் இதழியல் மரபு போற்றுதற்குரியது. அதனால் தான் மக்கள் வலம்புரியை விரும்பி வாசிக்கிறார்கள். வயதில் முதிர்ந்த பலர் வலம்புரியை விரும்புவதற்குப் பிரதான சிறப்பியல்புகளில் ஒன்று, அதன் வடிவமைப்பு, மிக இலகுவாக வாசிக்கக் கூடிய தெளிவான பக்க வடிவமைப்பு, யாழ்ப்பாணத்தின் மூலை முடுக்கெங்கும் வலம்புரி தவிர்க்க முடியாததொன்றாக நிலைத்திருக்கிறது.

ஒரு பத்திரிகையின் உருவாக்கத்தில் அதன் நிர்வாகி, பிரதம ஆசிரியர், ஆசிரிய பீடத்தினர் மற்றும் ஏனைய பணியாளர்களின் அயராத உழைப்பு இன்றியமையாதது. அந்த வகையில் நாளும், பொழுதும் வலம்புரியின் வளர்ச்சியில் கண்ணும், கருத்துமாக இருந்து பங்கெடுக்கின்ற அத்தனை பேரையும் இந்நேரத்தில் வாழ்த்தி, வலம்புரி மென்மேலும் வளர எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானின் நல்லருள் கிட்ட வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன் என அவர் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். (நி).

# திரிபோஷா வழங்குவதில் மீண்டும் சிக்கல் நிலை

(கொழும்பு)

குழந்தைகளுக்கான திரிபோஷா உற்பத்திக்காக கொள்வனவு செய்ய எதிர்பார்க்கப்படும் சோளத்தில் அஃப்லாடொக்சின் அளவு அதிகரிப்பதால் மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு திரிபோஷா வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக திரிபோஷா நிறுவனத்தின் தலைவர் தீப்தி குலரத்ன தெரிவிக்கின்றார்.

எனினும் கடந்த இரண்டு மாத காலப்பகுதியில் மருத்துவ அதிகாரி அலுவலகங்களின் கோரிக்கைக்கு அமைவாக சிறுவர்களுக்கு திரிபோஷா விநியோகம் செய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குழந்தைகளுக்கு வழங்கப்படும் திரிபோஷா தயாரிக்கப் பயன்படுத்தப்படும் சோளத்தில் உள்ள அஃப்லாடொக்சின் அளவு ஒரு சதவீதத்துக்கும் 'குறைவாக இருக்க வேண்டும்.'

ஆனால் இந்நாட்டில் கிடைக்கும் மக்காச்சோளம் குழந்தைகள் திரிபோஷா தயாரிப்பதற்கு ஏற்ற தரத்தில் இல்லை.

இந்நிலையால் குழந்தைகளுக்கு திரிபோஷா தயாரிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து எதிர்காலத்தில் அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், உலக உணவுஸ்தாபனத்தின் ஊடாக திரிபோஷா மூலப் பொருட்களை பெற்றுக் கொள்ளும் வேலைத்திட்டம் தற்போது உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவதரித்து 200 ஆண்டு நிறைவு மாநாடு கடந்த புதன்கிழமை குருபூஜை நிகழ்வுகளோடு ஆரம்பமாகி நேற்று முன்தினம் மாலை இறுதி நிகழ்வுகள் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெற்றன. குறித்த நிகழ்வில் நாவலர் பெருமானின் நினைவாக சமூக செயற்பாட்டாளர்களுக்கு நாவலர் விருதும் வழங்கி வைக்கப்பட்டது.

(படங்கள்- சிவானந்தன்)

# காற்றின் தரத்தில் மாற்றம்

## தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு மற்றும் கேகாலை மாவட்டங்களில் காற்றின் தரம் மீண்டும் குறைந்துள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி நேற்று திங்கட்கிழமை கொழும்பு மற்றும் கம்பஹா காற்றின் தரக் குறியீடு 150 இற்கு மேல் சென்றதாகவும் இந்தப் பகுதிகளில் வசிப்பவர்கள் உடல்நல பாதிப்புகளை சந்திக்க நேரிடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் யாழ்ப்பாணம், புத்தளம், பதுளை மற்றும் பொலநறுவை மாவட்டங்களில் வார இறுதியில் குறைந்த காற்றின் தரம் மேம்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவன அறிக்கை தெரிவித்துள்ளது.

இதேவேளை இலங்கையின் காற்றின் தரம் குறைந்துள்ளது என்பது ஏற்கனவே உறுதி செய்யப்பட்டுள்ளதோடு கடந்த சில நாட்களாக மழை பெய்து வருவதால் காற்றின் தரத்தில் மாற்றம் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளை இரண்டு மாதங்களுக்குள் வெளியிட தீர்மானம்

(கொழும்பு)

புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் ஒன்றரை அல்லது இரண்டு மாதங்களுக்குள் வெளியிடப்படும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேன தெரிவித்தார்.

அதன்படி விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியை நாளை ஆரம்பிப்போம் என்றும் பரீட்சை ஆணையாளர் குறிப்பிட்டார்.

இதேநேரம் உயர்தரப் பரீட்சையை ஜனவரி 23 ஆம்திகதி நடத்துவதற்கான ஆயத்தங்களைச் செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்னா கிங்ஸ் 16 ஓட்டங்களால் வெற்றி



லங்கா பிரீமியர் லீக் இருபது- 20 தொடரின், 17ஆவது லீக் போட்டியில், லைக்கா ஜப்னா கிங்ஸ் அணி 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், லைக்கா ஜப்னா கிங்ஸ் அணியும் காலி க்ளேடியேட்டர்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற லைக்கா ஜப்னா கிங்ஸ் அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய லைக்கா ஜப்னா கிங்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 170 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிக பட்ச ஓட்டங்களாக, அபீப் ஹொசைன் 54 ஓட்டங்களையும் சமரவிக்கிரம 32 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

காலி க்ளேடியேட்டர்ஸ் அணியின் பந்துவீச்சில், ரியாஸ் 3 விக்கெட்டுகளையும் நுவான் துசார 2 விக்கெட்டுகளையும் நுவான் பிரதீப் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 171 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய காலி க்ளேடியேட்டர்ஸ் அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 154 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால், லைக்கா ஜப்னா கிங்ஸ் அணி 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக, 35 பந்துகளில் 1 சிக்ஸர் 5 பவுண்டரிகள் அடங்கலாக, 54 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்ட அபீப் ஹொசைன் தெரிவு செய்யப்பட்டார். (6)



வடமாகாண விளையாட்டு விழா யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் கடந்த சனி மற்றும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெற்ற வடமாகாண விளையாட்டு விழாவில் 1 ஆம், 2 ஆம் இடங்களை தமதாக்கிய யாழ்ப்பாண, முல்லைத்தீவு மாவட்ட அணிகள்.

மாகாண மட்ட மெய்வல்லுநர் போட்டியில் மடு கல்வி வலயத்திற்குட்பட்ட மன்/ பெரிய பண்டிவிரிச்சான் தேசிய பாடசாலையின் மாணவியும் பெரிய பண்டிவிரிச்சான் கிழக்கு சென். மரிய கொறற்றி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த பி.றக்சிகா பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் தங்கம் வென்று மடு கல்வி வலயத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.



(படம்-ஜோசப் நயன்)

# மார்கழி மாத இராசி பலன்கள் 16.12.2022-14.01.2023

## மிதுனம்

**சவாலான காரியத்தை சாதாரணமாக முடித்துக் காட்டும் மிதுன இராசி வாசகர்களே!**

மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் சப்தம ஸ்தானத்தில் சூரியனோடும் சுக்கிரனோடும் இணைந்து புதன் சஞ்சரிக்கிறார். எனவே "புத சுக்கிர யோகம்", "புத ஆதித்ய யோகம்" உருவாகின்றது. எனவே அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் நடைபெற்றாலும் பொருளாதாரப் பற்றாக் குறை அகலும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இடமாற்றங்கள் இனிமை தரும் விதம் அமையும்.

உத்தியோகத்தில் உள்ளவர்கள் பணி ஓய்வு பெற்ற பின்பும் கூட மீண்டும் பணிபுரியும் வாய்ப்பு உண்டு.

**புதன் வக்கிர இயக்கம்**

உங்கள் இராசிக்கும் 4 ஆம் இடத்திற்கும் அதிபதியான புதன், மார்கழி 3 ஆம் திகதி தனுசு இராசியில் வக்கிரம் பெறுகிறார். சுகஸ்தானத்திற்கு அதிபதியான புதன் வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. ஆரோக்கியத் தொல்லையால் மருத்துவச் செலவு அதிகரிக்கும். உங்கள் இராசிநாதனாகவும் புதன் விளங்குவதால் எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. இரக்க சிந்தனையின் காரணமாக சில இடையூறுகளை சந்திப்பீர்கள்.

உத்தியோகத்தில் உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்காது. மகிழ்ச்சி குறையும். விலை உயர்ந்த பொருட்கள் அல்லது வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஏமாற்றங்களை சந்திக்க நேரிடும். உறுதியான உத்தியோக மாற்றம் கூட கைநழுவிச் செல்லலாம். இக்காலத்தில் சிறப்பு வழிபாடுகள் தேவை.

**மகர - சுக்கிரன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், மார்கழி 15 ஆம் திகதி மகர இராசிக்குச் செல்கிறார். 12 இற்கு அதிபதியான சுக்கிரன் 8 இல் சஞ்சரிக்கும் போது, "விபரீத இராஜயோகம்" செயற்படும். எனவே திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். திறமை மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து சில காரியங்களை முடித்துக் கொடுப்பர். பெண்வழிப் பிரச்சினைகள் அகலும். புதிய வாகனம் வாங்கிப் பயணிக்கும் எண்ணம் கைகூடும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. வெளிநாட்டில் இருந்து ஒருசில அழைப்புகள் வரலாம். பிள்ளைகளின் வேலை வாய்ப்பு கருதி எடுத்த முயற்சி வெற்றிபெறும்.

**புதன் வக்கிர நிவர்த்தி**

தனுசு இராசியில் சஞ்சரிக்கும் புதன், மார்கழி 24 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாவதால் நல்ல பலன்கள் இல்லம் தேடி வரப் போகிறது. குறிப்பாக இராசிநாதன் வக்கிர நிவர்த்தியாவதால் ஆரோக்கியம் சீராகும். ஆதாயம் தரும் தகவல்கள் அதிகம் கிடைக்கும். நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். நிச்சயித்த பிறகு நின்று போன திருமணங்கள் மீண்டும் கைகூடும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் பழக்கத்தால் பணி நிரந்தரமாக எடுத்த முயற்சி கைகூடும். வீடு, இடம் வாங்கும் யோகம் உண்டு. வெற்றிச் செய்திகள் அதிகம் வீடு தேடி வரும்.

**செவ்வாய் வக்கிர நிவர்த்தி**

உங்கள் இராசிக்கு 6,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய், மார்கழி 29 ஆம் திகதி ரிஷபத்தில் வக்கிர நிவர்த்தியாகிறார்.

ஜீவன ஸ்தானம் எனப்படும் ஆறாமிடம், எதிர்ப்பு, வியாதி, கடன் ஆகியவற்றையும் குறிக்கும். எனவே செவ்வாயின் வக்கிர நிவர்த்திக்குப் பின், மறைமுக எதிர்ப்புகள் அதிகரிக்கும். உங்கள் முன்னேற்றத்தை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டாம். உடல் நலத்தில் சிறுசிறு பிரச்சினைகள் உருவாகலாம். மருத்துவச்செலவு உண்டு. ஒரு கடனை அடைக்க மற்றொரு கடன் வாங்கும் சூழ்நிலை ஏற்படும். லாபாதிபதியாகவும் செவ்வாய் விளங்குவதால் தொழிலில் ஓரளவு எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். தொழிலை விரிவு செய்யவும் சொந்தக் கட்டடத்திற்கு மாற்றவும் எடுத்த முயற்சி கைகூடும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு வெளிநாட்டு நிறுவனங்களில் இருந்து நல்ல சம்பளத்துடன் அழைப்புகள் வரலாம். இளைய சகோதரத்தோடு இருந்த பகை மாறும். இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறிகள் தென்படும். இடம், பூமி விற்பனையால் இலாபம் கிடைக்கும். முன்னோர் சொத்துக்களை விற்றுவிட்டு முறையாக புதிய சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். இம்மாதம் சனிக்கிழமை தோறும் சனிபகவானை வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் 10 இல் குரு சஞ்சரிப்பதால் இடமாற்றம், ஊர் மாற்றம் வரலாம். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் கணவன்-மனைவிக்குள் புரிந்து கொண்டு செயற்படுவதன் மூலமே அமைதி காண இயலும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் அமைப்பு ஏற்படலாம். பணி புரியும் பெண்களுக்கு சலுகைகள் கிடைப்பதில் தாமதம் காணப்படும். உத்தியோகத்தில் இருந்து விருப்ப ஓய்வில் வெளிவரும் எண்ணம் அதிகரிக்கும்.

## கடகம்

**வேகமும் விவேகமும் கொண்டு செயற்படும் கடக இராசி வாசகர்களே!**

மார்கழி மாதக் கிரக நிலைகள்ளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 9 இல் குருபகவான் வீற்றிருக்கிறார். அவரது பார்வை உங்கள் இராசியில் பதிவதால் தடைப்பட்ட காரியங்கள் இனி தானாக நடைபெறும். பொருளாதாரப் பற்றாக்குறை அகலும்.

புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ஆனால் அதேநேரம் கண்டகச்சனியின் ஆதிக்கமும் இருக்கிறது. எனவே எவ்வளவு தான் பணம் வந்தாலும் சேமிக்க இயலாது.

**புதன் வக்கிர இயக்கம்**

உங்கள் இராசிக்கு 3,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், மார்கழி 3 ஆம் திகதி தனுசு இராசியில் வக்கிரம் பெறுகிறார். அவர் வக்கிரம் பெறுவது ஒருவழிக்கு நன்மை தான். 12 ஆம் இடத்திற்கு அதிபதி வக்கிரம் பெறும் பொழுது பயணங்கள் பலன் தரும். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். குடும்ப முன்னேற்றத்திற்காகவும் குழந்தைகளுக்காகவும் செலவிடும் சூழ்நிலை உருவாகும். இழந்த வாய்ப்புகளை மீண்டும் பெறுவீர்கள்.

சகோதர வழியில் சில பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். பாகப்பிரிவினைகளில் தாமதம் ஏற்பட்டாலும் முடிவு நல்லவிதமாக அமையும்.

**மகர-சுக்கிரன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 4,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், மார்கழி 15 ஆம் திகதி மகர இராசிக்குச் செல்கிறார். அவர் சப்தம ஸ்தானத்திற்கு வருவது நன்மை தான்.

அங்குள்ள சனியோடு சுக்கிரன் சேருவதால் குடும்பத்தில் சில காரியங்கள் நடைபெறுவதில் இருந்த தடை அகலும். துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. வெளிநாட்டில் இருந்து நல்ல தகவல்கள் வரலாம். புதிய பொறுப்புகளும் பதவிகளும் கிடைக்கும். இதுவரை முடிவெடுக்க முடியாத சில பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வு கிடைக்கும். தாய் வழி ஆதரவு உண்டு. ஆன்மிகப் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**புதன் வக்கிர நிவர்த்தி**

தனுசு இராசியில் சஞ்சரிக்கும் புதன், மார்கழி 24 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாவதால் விரயஸ்தானம் வலுப்பெறுகிறது. எனவே விரயங்க்ள் கூடும். அதனால் சுப காரியங்களுக்குச் செலவு செய்து, சுப விரயமாக மாற்றிக் கொள்ளுங்கள். கொடுக்கல்-வாங்கல்களில் பிரச்சினைகள் அதிகரிக்கும். வசதிகளைப் பெருக்கிக் கொள்ள முன் வருவீர்கள். விலகிச் சென்ற உடன் பிறப்புகள் விரும்பி வந்திணைவர். வீடு மாற்றங்கள், இடமாற்றங்கள் எதிர்பார்த்தபடி அமையும். புதிய முயற்சிகளில் வெற்றி பெற மாற்றினத்தவர்கள் ஒத்துழைப்பு செய்வர்.

**செவ்வாய் வக்கிர நிவர்த்தி**

ரிஷபத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய் மார்கழி 29 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிறார். உங்கள் இராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதி வக்கிர நிவர்த்தியாவது யோகம்தான்.

தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். துணையாக இருக்கும் நண்பர்கள் தோள் கொடுத்து உதவுவர். வெற்றிக்குரிய செய்திகள் வீடு வந்து சேரும். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர். பூமி விற்பனையால் இலாபம் உண்டு. செவ்வாய் உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்திற்கும் அதிபதியாக விளங்குவதால் தொழில் வளம் சிறப்பாக இருக்கும்.

எதிர்பார்த்ததை விட கூடுதல் இலாபம் கிடைக்கும். புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். சம்பளம் உயர்ந்து சேமிப்பை அதிகரிக்கும் எண்ணங்கள் கைகூடும். பணியாளர்களின் ஒத்துழைப்பு பரவசப்படுத்தும். கால்நடை வளர்ப்பில் ஆர்வம் காட்டுவீர்கள். இடம், பூமி வாங்குவதில் அக்கறை கூடும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். பூமி விற்பனையால் இலாபம் உண்டு. குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்காக எடுத்த முயற்சி கைகூடும். இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குருபகவானை வழிபடுவதன் மூலம் குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் சனியின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் எதையும் திட்டமிட்டபடி செய்ய இயலாது. அடிக்கடி மனக்குழப்பங்கள் உருவாகும். கூடுதல் விரயங்களால் குடும்பத்தில் பிரச்சினைகள் தலைதூக்கும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

ஊர் மாற்றம் செய்யலாமா? உத்தியோகத்தில் பணியிட மாற்றம் செய்யலாமா? என்று சிந்திப்பீர்கள். சொத்து விற்பனையால் வரும் தொகையைக் கொண்டு, தொழிலை மேம்படுத்துவீர்கள். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்ளுங்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களால் நன்றியோடு நினைவுகூரப்பட வேண்டியது வலம்புரிப்பத்திரிகை

## அருட்தந்தை கலாநிதி.ஞபன் மரியாம்பிள்ளை

**(யாழ்ப்பாணம்)**

**வலம்புரிப் பத்திரிகை ஒப்பாரும் மிக்காரும் அற்ற ஒரு பத்திரிகையாக வளரும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. இப்பத்திரிகை மக்களின் சுபீட்சமான எதிர்கால வாழ்வுக்காக தன்னைப் பணயம் வைத்து பணியாற்றியுள்ளது என வலம்புரிப் பத்திரிகையின் 23 ஆவது ஆண்டு நிறைவையொட்டி அருட்தந்தை கலாநிதி.ஞபன் மரியாம்பிள்ளை அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார்.**

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வலம்புரிப் பத்திரிகை 2022 ஆம் ஆண்டில் தனது 24 ஆவது ஆண்டில் காலடி பதிக்கின்றது என்ற செய்தி வலம்புரிப் பத்திரிகையின் ஆரம்பம் முதல் இன்று வரை நான் அதன் தொடர்பில் இருக்கின்ற வகையில் உண்மையிலேயே என் மனதிற்கு மகிழ்வு தரும் விடயமாகும்.

இந்த வேளை வலம்புரிப் பத்திரிகைக்கு என் மனம் நிறைந்த உண்மையான மகிழ்வுமிக்க, இறையாசீர் மிக்க வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மன நிறைவு அடைகிறேன்.

வலம்புரிப் பத்திரிகையின் வருகைக்கும் அதன் இன்றைய வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றிக்கொண்டிருக்கும் நிர்வாக இயக்குநர்களான சி.வெற்றிவேலாயுதம், க.திருமாலழகன், அதன் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் ஆகியோரின் நெறியாள்கையில் அர்ப்பணிப்புடன் பணியாற்றும் உதவி ஆசிரியர்கள் - செய்தியாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் என்றும் தமிழ் மக்களால் நன்றியோடு நினைவுகூரப்பட்டு பாராட்டப்பட வேண்டியவர்கள்.

இந்தியா தமிழ்நாடு தினத்தந்தி பத்திரிகையின் முன்னை நாள் நிறுவன ஆசிரியர் ஒரு பத்திரிகையை நடத்துவது ஒரு யானையைக் கட்டித் தீனிபோடுவதற்கும் ஒரு நெருப்பாற்றை நீந்திக் கடப்பதற்கும் சமமாகும் எனத் தெரிவித்தார்.

வலம்புரிப் பத்திரிகை ஒரு யானையைக் கட்டித் தீனி போடுவதற்கும் ஒரு நெருப்பாற்றை நீந்திக் கடப்பதற்குமான கால கட்டத்தைக் வெற்றியாகக் கடந்து விட்டது என்றே நான் உறுதியாக நம்புகிறேன்.

இனி வருங்காலத்தில் வலம்புரிப் பத்திரிகை ஒப்பாரும் மிக்காரும் அற்ற ஒரு பத்திரிகையாக வளரும் என்பதில் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை என்பதைத் தெளிவாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.


நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ் என்ற மகுட வாக்குடன் கடந்த 23 ஆண்டுகளாக வெற்றிநடை போடும் வலம்புரிப் பத்திரிகை தமிழ் மக்களின் சுதந்திரமான சுபீட்சமான எதிர்கால வாழ்வுக்காக தன்னைப் பணயம் வைத்துப் பணியாற்றியுள்ளது என்பதற்கு இரண்டாம் கருத்து இருக்க முடியாது என்பதை வலம்புரிப் புத்திரிகையின் பயணப் பார்தையுடன் நெருங்கிப் பயணித்தவர்கள் நன்கு அறிவர்.

பத்திரிகைகள் சமுதாயத்தின் காவல் நாய்கள் என்ற கோட்பாட்டை என்றும் தெளிவாகத் தன் மனதில் இருத்தித் தமிழ் மக்களுக்குச் சாதகமானவற்றை வரவேற்று ஒட்டி பேசியும் பாதகமானவற்றை எதிர்த்து வெட்டிப் பேசியும் வலம்புரிப் பத்திரிகை அன்று முதல் இன்றுவரை ஆற்றி வரும் பணி மகத்தானது.

பத்திரிகைத்துறை தர்மம் - பத்திரிகைத் துறை ஒழுக்க நெறிக் கோட்பாடுகள் - பத்திரிகைத்துறை சட்டக் கோவை என்பவற்றில் என்றும் மிகக் கவனமாக இருக்கும் வலம்புரிப் பத்திரிகை பல பத்திரிகைகளுக்கு ஒரு மேல் வரிச் சட்டமாகும்.

வலம்புரிப் பத்திரிகையின் அச்சுப் பதிவு தெளிவாக உள்ளது. செய்திகள் துல்லியமாக அமைகின்றன. பக்க வடிவமைப்பு பக்கத்திற்குப் பக்கம் கவர்ச்சிகரமாக உள்ளது. படங்கள் தெளிவாக உள்ளன. ஆசிரியர் தலையங்கங்கள் எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தாற் போல் சிறப்பாக அமைகின்றன.

வலம்புரிப் பத்திரிகையின் பலம் அதன் தரம்மிக்க ஆசிரியர் தலையங்கம் என்பதை 2011 ஆம் ஆண்டு நான் வெளியிட்ட எனது 9 ஆவது ஊடகவியல் நூலான ஆசிரியர் தலையங்கம் என்ற எனது நூலில் தெளிவாக ஆதாரங்களுடன் தெரியப்படுத்தி உள்ளேன்.



அது இன்றும் வலம்புரிப் பத்திரிகை ஆசிரியர் தலையங்கங்களில் நிரூபிக்கப்பட்டு வருவது பாராட்டுதற்குரியது.

இதுவும் வலம்புரிப் பத்திரிகையின் இன்றைய பலமான இருப்பிற்கும் விற்பனைக்கும் ஒரு முக்கிய காரணமாக உள்ளது.

எதிர்வரும் ஆண்டில் தமிழ் மக்களின் சுபீட்சமான எதிர்காலத்திற்கு வழிவகுக்கும் பல புதிய திட்டங்களைத் தீட்டி செயற்பட வேண்டுமென அன்புடன் வேண்டி இறையாசீர்மிக்க வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மன நிறைவு அடைகிறேன் எனத் தெரிவித்தார். (ஙி)

## இராசிபலன்

20.12.2022
மார்கழி 05, செவ்வாய்க்கிழமை
துவாதசி முன்னிரவு 9.49 மணிவரை

சுவாதி முற்பகல் 07.07 மணிவரை
சுபநேரம் -10.54-12.24 மணிவரை
இராகுகாலம் -03.24-04.54 மணிவரை

சந்திராஷ்டமம் - அச்சுவினி

**வளவன்**



மேஷம்

தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், விருந்தினர் வருகையுண்டு, காரிய அனுகூலமுண்டு.



ரிஷபம்

பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், உடல் நலன் சீராகும், செல்வ நிலை உயர வழிவகை செய்வீர்கள், செய்தொழிலில் மேன்மையுண்டு.



மிதுனம்

சான்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், பிள்ளைகளின் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வாகன சுகமுண்டு.



கடகம்

விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், செய்தொழில் மேன்மையுண்டு, வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், பயணங்கள் கைகூடும்.



சிம்மம்

நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், நினைத்தது நிறைவேறும் வாய்ப்புண்டு, தேவையற்ற முரண்பாடுகள் அகலும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.



கன்னி

பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், உடல்நலன் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.



துலாம்

குடும்பத்தில் பெரியவர்களின் சொற்களை கேட்டு நடப்பது நல்லது, செலவுக்கேற்ப வருமானம் வந்து சேரலாம், கெடுக்கல்-வாங்கல் ஒழுங்காகும், கற்பனை மிகுதியான நாள்.



விருச்சிகம்

காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.



தனுசு

பொதுவாழ்வில் புகழ் கூடும் நாள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும்.



மகரம்

புதிய முயற்சிகள் கைகூடும் வாய்ப்புண்டு, பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், கனவுகள் நனவாக கற்பகமூர்த்தியை வழிபட வேண்டிய நாள்,



கும்பம்

தொழிலில் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.



மீனம்

குடும்பத்ினருடன் கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், உடல்நலனில் கவனம் தேவை, விரயங்கள் மேலோங்கும் நாள்.

தீய செயலைப் பாராட்டுபவன் தீயவனாகத்தான் இருப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவையை முன்னிட்டு பல்கலையில் நடைபெற்ற போட்டிகள்

(யாழ்ப்பாணம்)


திருவெம்பாவையை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினரால் சைவ சமய கலாசாரங்களை பிரதிபலிக்கும் போட்டிகள் பல்கலைக்கழக மாணவர்களிடையே நேற்று முன்தினம் நடத்தப்பட்டது.

2020 ஆம் ஆண்டு முதல் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களினால் திருவெம்பாவை ஓதுதல் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் இவ்வருடம் மாணவர்களிடையே ஆன்மிக கலாசார விழுமியங்களை வெளிக்கொணரும் முகமாக குறித்த போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.இதன்போது பல்கலைக்கழக மாணவர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

திருவெம்பாவை விரத காலத்தில் மார்கழி பெருவிழா எனும் தொனிப்பொருளில் மாணவர்களால் சைவசமய ஆன்மிகம் சார்ந்த நிகழ்வுகள் இடம்பெற்று வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்வுள்ளன. (நி-6-33)

# மாணவர்களை இலக்கு வைத்து யாழில் போதைப்பொருள் விற்பனை

## 3.5 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது



(யாழ்ப்பாணம்)


பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து கஞ்சா கலந்த மாவா போதைப்பாக்கினை விற்பனை செய்து வந்த நபர் ஒருவரை யாழ்ப்பாண பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து 3.5 கிலோ கிராம் எடையுடைய கஞ்சா கலந்த மாவா போதைப்பாக்கினை கைப்பற்றியுள்ளதாகவும் குறித்த நபர் நீண்டகாலமாக மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பாக்கு விற்பனையில் ஈடுபட்டு வந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபரை யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-33-104)

## வீதிகளை புனரமைக்குமாறு கோரி

# தென்மராட்சி பிரதேச செயலகம் முன் மக்கள் கவனயீர்ப்பு போராட்டம்



(சாவகச்சேரி)

கொடிகாமம் - கொயிலாமனைப் பிரதேசத்தில் ஐ-செயற்றிட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மூன்று வீதிகளையும் உடனடியாக புனரமைக்கக் கோரி நேற்று திங்கட்கிழமை காலை கிராம மக்கள் ஒன்றிணைந்து தென்மராட்சிப் பிரதேச செயலகம் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இது தொடர்பாக கொயிலாமனை ஜே/320 கிராம மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்

எமது பிரதேசத்தில் உள்ள தட்டாங்குளம் வீதி,ஸ்ரீ பாரதி பாடசாலை ஆரம்ப வீதி மற்றும் கொயிலாமனை வீதி ஆகிய வீதிகள் கடந்த காலத்தில் ஐ-செயற்றிட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்வதற்கு தெரிவாகியிருந்தன.

இந் நிலையில் திடீரென பணிகள் நிறுத்தப்பட்டு பெயர்ப் பலகைகளும் அவ்விடத்தில் இருந்து அகற்றப்பட்டுள்ளன. அறுபது வருட காலமாக புனரமைக்கப்படாத நிலையில் உள்ள குறித்த வீதிகளை மாரி காலத்தில் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது.குறித்த வீதி ஊடாகவே எமது இந்து மயானத்திற்கு செல்ல வேண்டிய நிலை காணப்படுகிறது. கிராம மக்கள் மாரி காலத்தில் வீதி சீரின்மை காரணமாக பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். எனவே குறித்த வீதிகளின் தேவைப்பாடு கருதி உடனடியாக தெரிவு செய்யப்பட்ட வீதிகளை புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்திருந்தனர்.அத்துடன் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பிரதேச செயலரிடம் இது தொடர்பான மகஜர் ஒன்றினையும் கையளித்தனர். (நி-6-30)

# தேசிய வாசிப்புமாத பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

"அறிவுசார் சமூகத்தை உருவாக்க வாசிப்பு" எனும் தொனிப் பொருளில் வலி. வடக்கு பிரதேச சபை, மல்லாகம் பொது நூலக உப அலுவலகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட தேசிய வாசிப்பு மாதம் 2022 இற்கான பரிசு வழங்கும் நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு அளவெட்டி அருணோதயா கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக தாவரவியற்றுறை இணைப் பேராசிரியர். எ. சி. தவரஞ்சித் , சிறப்பு விருந்தினராக வலி. வடக்கு பிரதேச சபையின் தலைவர் எஸ்.சுகீர்தன் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-6)

## பெண் சாதனையாளர்களிடம் இருந்து

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு (2023) வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சினால் பெண் சாதனையாளர்களை கௌரவிக்கும் முகமாக வடக்கு மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட பல்வேறுபட்ட துறைசார் பெண் சாதனையாளர்களிடமிருந்து (இலக்கியம், கலை, விளையாட்டு, ஊடகம், தொழில் முயற்சி,இன்னும் பல துறைகள் உள்ளடங்கலாக) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப் போட்டிகளில் பங்குபற்ற ஆர்வமுள்ளவர்கள் மகளிர் விவகார அமைச்சு, வ.மா, இல. 04, புருடி லேன், புங்கன்குளம் சந்தி, அரியாலை, கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரி ஊடாகவோ அல்லது அமைச்சின் மின்அஞ்சல் npminwa @gmail.com ஊடாகவோ தொடர்பு கொண்டு போட்டி நுழைவுக்கான விண்ணப்பம் மற்றும் விதிமுறைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (4)

# பதவியை இராஜினாமா செய்த பருத்தித்துறை நகரசபை தலைவர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பருத்தித்துறை நகர சபையின் வரவு -செலவுத்திட்ட கூட்டம் நடைபெறவிருந்த நிலையில் நகர சபை தலைவர் யோ.இருதயராஜா தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆளுகைக்குள் உட்பட்ட பருத்தித்துறை நகர சபையின் 2023 ஆம் ஆண்டிற்கான வரவு -செலவுத்திட்ட வரைபு கடந்த 6 ஆம் திகதி சபையில் சமர்ப்பிக்கப்பட்ட போது , தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் உள்ளிட்ட 8 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்து தோற்கடித்தனர்.

இந்நிலையில் நேற்று திங்கட்கிழமை திருத்தங்களுடன் சபையில் சமர்ப்பிக்கப்படவிருந்த வரவு-செலவுத் திட்டத்தினையும் உறுப்பினர்கள் தோற்கடிக்க திட்டமிட்டுள்ளதாக வெளியான தகவலை அடுத்து நகர சபை தலைவர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். (நி-6-33-104)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1990 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 3<br>கி.பா:சூரி 1 செவ் 11 இல்<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்: A/L IT Diploma (வியாபாரம்)<br>எதிர்பார்ப்பு:படித்த பெண்<br>தொ.இ: B/13201 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 1<br>கி.பா:43 ¾ சூரி 11 செவ் 1 இல்<br>உயரம்:4'9"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:அரச, தனியார் தொழில்<br>தொ.இ:G/13204 |
| பிறப்பு:1985 கிறிஸ்தவம் RC<br>நட்சத்திரம்: திருவோணம் 2<br>கி.பா:சூரி 9 செவ் 10 இல்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்: O/L, சாப்பாட்டுக்கடை (சொந்தம்)<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண். பொருத்தம் அவசியமில்லை<br>தொ.இ: B/13203 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 4<br>கி.பா: 33 சூரி 8 செவ் 7 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: சித்த மருத்துவர்<br>எதிர்பார்ப்பு:வைத்தியர்,கணக்காளர் அல்லது BSc பட்டதாரி ஆசிரியர்<br>தொ.இ:G/13206 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 2<br>கி.பா: சூரி 2 செவ் 10 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:BSc,MScபொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு:உயர்பதவி<br>தொ.இ: B/13205 | பிறப்பு:1994 இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை 1<br>கி.பா:சூரி 12 செவ்11 இல்<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்:MBBS வைத்தியர்<br>எதிர்பார்ப்பு:MBBS வைத்தியர் வடபகுதி மட்டும்<br>தொ.இ: G/13211 |
| பிறப்பு:1977 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>கி.பா:சூரி 1 செவ் 12 இல் உயரம்:5'4"<br>தகைமை/ தொழில்:O/L (வியாபாரம் வீட்டுத் தளபாட விற்பனை சொந்தம்)<br>எதிர்பார்ப்பு: விவாகரத்துப் பெற்றவர். இரு பிள்ளைகள் உண்டு<br>தொ.இ: B/13207 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை 3<br>கி.பா:22½ சூரி 10செவ் 7 இல்<br>உயரம்:168 cm<br>தகைமை/தொழில்: BSc பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி.வைத்தியர் வேண்டாம்<br>தொ.இ: G/13218 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண் மூன்றில் எழுச்சி பெறும் தமிழ்க்குரலுக்கு

# என் இனிய வாழ்த்துக்கள் - பேராசிரியர் மிகுந்தன்

**(யாழ்ப்பாணம்)**

**அனைத்து வயதினரையும் தன்பால் ஈர்க்கும் திறன் வலம்புரிப் பத்திரிகைக்கே உரித்தான ஒரு தனித்துவமாகும் என பேராசிரியர் கு.மிகுந்தன் தெரிவித்தார்.**



வலம்புரிப் பத்திரிகை 24 ஆம் ஆண்டில் காலடி பதிக்கும் வேளை வாழங்கிய வாழ்த்துச் செய்தியில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வலம்புரியை என்றும் இளையவளாகவே பார்க்கின்றேன். வளர வளர புதுமையும் பொலிவும் கொண்டு 24 ஆவது அகவையில் நிதானமாக அடியெடுத்து வைக்கும் செய்திக் களஞ்சியத்தைக் காண தினமும் மனம் துடிக்கும் நெஞ்சங்களில் நானுமொருவன். செய்திகளால் சீரிச்சிங்காரித்து துடுக்குத்தனத்துடன் அதிகாலையில் ஆசுவாசமாக அனைவரினதும் கைகளில் கிடைக்கும் போது மனம் ஏதோவொரு வகையில் கட்டுண்டு நீ சொல்லிச் செல்லும் தலைப்புச் செய்திகளை ஒரே தரத்தில் வாசித்து அமைதி கொள்ளும்.

உலக நடப்புக்களை நம் தேசத் தகவல்களைத் தொகுத்து தரும் விதம் உன்னை என்றும் அனைவரினதும் நட்புக்குரியவளாக வைத்திருக்கிறது. ஏதோ அன்றைய தினத்தின் அனைத்து செய்திகளையும் தம்முள்ளே அடக்கிய தான ஓர் இறுமாப்பு. வாசித்த தலைப்புகளில் ஒரு அலசலே அடுத்த நிமிடங்களில் நடந்து விடும். அன்றைய நேரத்துக்கான செவிமடுத்தலாக மேலதிக செய்திகளை உன்னை வருடியே பக்கம் பக்கமாக கடந்து அனைத்து செய்திகளையும் வாசித்து கிரகித்து சேமித்தும் வைப்பதுண்டு. அன்றைய தினத்தின் செய்தி வள்ளலாகவே அனைவரையும் மாற்றி வைக்கும் திறன் வலம்புரிக்கே உரித்தான தனித்துவம்.

ஆச்சரியம் என்னவென்றால் அனைத்து வயதினரையும் உன்னை நோக்கி கவர்ந்திழுக்கும் திறன் அடிப்படையிலேயே உனக்குண்டு. அனைத்து செய்திகளிலும் ஆழ் மையக் கருத்து கணீரென ஒலிக்கும் சக்தியை தனதாக்கிக் கொண்ட வலம்புரியாள் அழகு தமிழில் தன் தனித்துவத்தை தவற விட்டு விடாத தன்மையை அவளைத் தாங்கிப் பிடிக்கையில் அனைவரும் உணர்ந்து பெருமிதம் கொள்வர். கனதியான ஆசிரியர் தலையங்கம் அனைவரும் விரும்பி வாசிக்கும் ஒருதரமின்றி மீண்டும் ஒரு முறை, பல முறை வாசிக்கத் தூண்டும். வாசித்தபின் மெய் மலர்ந்து உணர்வுகளால் உயர்ந்தெழுகின்ற காட்சி தினந்தினம் அரங்கேறும். அன்றைய செய்திகளை தனக்குரிய ஊடகப் பாணியில் கடைந்தெடுத்து அவற்றை அழகு தமிழில் அர்ச்சித்து தருகின்ற பாங்கு வலம்புரியாளுக்குரியது. தினசரி செய்திப் பெட்டகமாக சுடச்சுட வெளிவரும் வலம்புரிக்கு அகவை 23 என்றவுடன் வியப்புக் கலந்த மகிழ்ச்சியும் மனதாரப் பாராட்டும் என்றும் உரித்தாகுக.

வளர்ந்து வா பெண்ணே! பெண்ணணங்கின் வாண்மையனைத்தையும் மண்ணாளும் மன்னர்களின் மணிமுடிபோல் உயர்த்தி வைத்து ஊடகத் துறையின் கட்டுக்கோப்புகளுக்கமைய உலகத்தவர் கைகளில் தினமும் கைசேர்க்கும் ஒவ்வொரு நொடிப் பொழுதும் உனக்கான தருணங்கள்.

ஆடி வா பெண்ணே! வையகமெங்கும் மனம் ம்கிழும் கொண்டாட்டங்களும் மகிழ்ச்சிக் குதூகலங்களும் இன்னும் இன்சுவை செய்திகளை மனம் வைத்து மறக்காமல் பதிவிடும் பாங்கும் உன்னை தினமும் அலங்கரித்து பார்க்கும். இடர் காலங்களில் எதுவாயினும் செய்திகளை பொறுப்புடன் கோர்த்து அனைவரும் துயிலெழ முன் நீயெழுந்து அதே கம்பீரத்துடன் அவரவருக்கு பொறுப்புடன் வழங்கும் திறனை நீ இச்சிறுவயதில் பெற்றது ஆச்சரியம் தான். உன் வளர்ச்சி கண்டு பெருமிதம் கொள்கின்றேன்.

அதிகாலையில் அதே வீறாப்புடன் நீ காட்சி தரும் போது "இன்று என்ன" என்னும் மனதளவில் ஒவ்வொருவருக்கும் எழும் கேள்விகளுக்கு பதில்களை பக்குவமாக, சுருக்கமாக பணிவுடன் தருவதில் நீ திறமைசாலி. எது வேண்டுமோ அது அனைத்தையும் உன்னுள்ளே நீ புதைத்து வைத்திருக்கும் போதும் ஒவ்வொரு வயது விடை பெறும் போதும் இள்மை குன்றாது, இனிமை தாளாது, இலக்கணம் தவிர்க்காது இன்சுவை குறையாது, இடர்கண்டு அஞ்சாது இளஞ் சூட்டுடன் அனைத்தும் அளவளவறிந்து தரமான செய்தியாளினியாய் உன் பாணியில் அனைவரையும் உன் பக்கம் நிறுத்தி வைக்கும் உனக்குரிய திமிர் தான் என் போன்றவர்களை நீ உதயமான அன்றிலிருந்து உன் பக்கம் கவர வைத்திருக்கின்றது. பலரது எழுத்தாற்றலுக்கு, எழுத்தியிருக்கு வழிகோலியவளும் வலிமை சேர்த்தவளும் நீயே தானே. உன்னுள் என்னையும் வைத்து என் போன்றவர்களுக்கு பெருமை சேர்த்ததும் உன்னவளின் ஆளுமை என்பேன்.

உதயமாகும் அனைத்து நாளிகைகளிலும் நேர்மறை ஆற்றலை உனக்குள் கனதியாக தாங்கி வரும் திறனை என்னவென்பேன். வாழ வழி சொல்லும் வழிப்போக்கனாய் வரலாற்றை வழக்கழியாது அவ்வப்போது மீட்டி மிரட்டும் வரலாற்றுப் பொக்கிஷமாய் உனக்குள் உருக்கொண்டது உன்னுள் வளர்த்த திறமையன்றி வேறில்லை.

உன் அடையாளத்தை என்றென்றும் இழந்து விடாது இப்படியே இன்னும் கனதியாய் உலக மக்களுக்கு எடுத்து வா. உலகம் தற்றுணிவின்றி பலவற்றை சுருக்க முயலும் போது உன்னை சுருக்கிக் கொள்ளாதே. உயர்ந்தெழுந்து நீ உரக்கச் சொல்லும் அனைத்தும் உன் சார்ந்தவர்கள் முணுமுணுக்கும் உணர்வின் வெளிப்பாடுகள் என்பேன். வாழ்க வளமுடன் இவ் வையகம் இன்னும் சிறக்க வேண்டும் என தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார். (நி)

## கடுமையான தொண்டைப் புண், காய்ச்சல் இருந்தால் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெறுங்கள்

### சுகாதார துறையினர் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் இன்புளுவென்சா எனப்படும் புதிய வைரஸ் காய்ச்சல் வேகமாகப் பரவுவதால் மக்களை மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு சுகாதார மருத்துவ நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

பொதுமக்கள் முகக் கவசங்களை அணிந்து. உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு இலங்கை நுண்ணுயிரியல் நிபுணர்கள் நிறுவகம் தெரிவித்துள்ளது.

கடுமையான தொண்டைப் புண் மற்றும் காய்ச்சல் என்பன இன்புளுவென்சா வைரஸின் அறிகுறியாக இருக்கும் என இலங்கை நுண்ணுயிரியல் நிபுணர்கள் நிறுவகத்தின் தலைவர் மருத்துவர் ரோஹினி வடநம்பி வித்துள்ளார்.

மேலும் இலங்கையில் இந்த வைரஸின் தாக்கம் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை பரவியுள்ளதாகவும் காய்ச்சல் அறிகுறிகள் இருந்தால் உடனடியாக மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு சுகாதாரத் துறையினர் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளனர். (நி)


**இந்தியத் துணைத் தூதரகம், யாழ்ப்பாணம்**

**காணி தேவை**

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகமானது, தூதரகத்திற்கான அலுவலக கட்டடத்தை அமைப்பதற்காக மற்றும் உத்தியோகத்தர்களுக்கான குடியிருப்புகளை நிர்மாணிப்பதற்காக யாழ்ப்பாணத்தில் பொருத்தமான காணியை தேடுகிறது. காணிக்கான குறைந்தபட்ச நில அளவானது 1 ஏக்கர் (16 பரப்பு/160 பேர்ச்) ஆகும். காணியானது பிரதான சாலையில் அதிகபட்ச முகப்பை கொண்டதாக இருக்க வேண்டும். மற்றும் காணி தொடர்பில் எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லாமல் இருக்க வேண்டும். குறிப்பாக சட்டப்பிரச்சினைகள் மற்றும் நீதிமன்ற வழக்குகள் அற்ற தனிப்பட்ட சொத்தாக இருக்க வேண்டும். ஆர்வமுள்ள தரப்பினர் அல்லது தனி நபர்கள் தங்கள் முன்மொழிவை காணி தொடர்பான முழு விபரங்களுடன் எதிர்பார்க்கும் விலையுடன் பின்வரும் முகவரிக்கு பாதுகாப்பாக மூடப்பட்ட உறையில் அனுப்பவும்.

**தலைமை நிர்வாக அதிகாரி,**
**இந்தியத் துணைத் தூதரகம்,**
**இல.14, மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி இலக்கம்:+94-21-2220504 &2220505**
**மின்னஞ்சல் முகவரி:** hoc.jaffna@mea.gov.in



**அரச அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனத்தின் பதவி வெற்றிடங்கள்**

**புதிததாக ஆரம்பிக்கப்படவுள்ள யாழ்.கிளைக்கு முழுநேர மற்றும் பகுதி நேர வேலைவாய்ப்பு**

**கல்வித் தகைமை :-** O/L Or A/L
**வயதெல்லை :-** 18-45
**அடிப்படைச் சம்பளத்துடனான வேலைவாய்ப்பு**

- அலுவலக உத்தியோகத்தர்
- நிதி முகாமையாளர்
- நிதி சேகரிப்பாளர்



**போன்ற பதவிகளுக்கான வெற்றிடங்கள் உள்ளன.**

மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும். [நிபந்தனைக்குட்பட்டது]

**நேர்முகத்தேர்வு - புதன்கிழமை 2022.12.21 10மணியளவில்**

(13820)

**இடம்:-570 வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.**

**076 263 8954, 021 222 8071**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்பந்து போட்டியில் ஆர்ஜென்டினா வெற்றி;
# பிரான்ஸ் முழுவதும் கலவரம் வெடிப்பு

**(பாரிஸ்)**

**கட்டார் உலகக் கிண்ண கால்பந்து இறுதிப் போட்டியில் ஆர்ஜெனடீனா வெற்றி பெற்றதை அடுத்து பிரான்ஸ் முழுவதும் கலவரம் வெடித்துள்ளது.**



பிரான்ஸ் அணி பெனால்டி முறையில் 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றி வாய்ப்பை இழந்த நிலையில் பாரிஸ், நைஸ் மற்றும் லியான் நகரங்களில் ஆயிரக்கணக்கான கால்பந்து ரசிகர்கள் தெருக்களில் குவிந்தனர்.

பாரிஸ் நகரில் அமைந்துள்ள பிரபலமான Champs-Elysees பகுதியில் கலகத்தடுப்பு பொலிஸாருக்கும் கால்பந்து ரசிகர்களுக்கும் இடையே மோதல் வெடித்தது.

இதனிடையே, லியான் பகுதியில் கலவரம் வெடித்ததை அடுத்து கலகத் தடுப்பு காவல்துறையினர் கண்ணீர்ப் புகைகுண்டுகளை வீசியதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், தேசியக் கொடியை போர்த்தியபடி கற்கள், போத்தல்கள் மற்றும் பட்டாசுகளை பொலிஸார் மீது கால்பந்து ரசிகர்கள் வீசியுள்ளனர். சில பகுதிகளில் கூட்டத்தை கலைக்க நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(நி)

## சுரங்கப் பாதையில் ஏற்பட்ட தீ விபத்தில் 19 பேர் உயிரிழப்பு, 32 பேர் காயம்




(காபூல்)

ஆப்கானிஸ்தானில் வீதி சுரங்கப்பாதையில் ஏற்பட்ட தீ விபத்தில் சுமார் 19 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 32 பேர் காயமடைந்துள்ளதாகவும் உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தலைநகர் காபூலை வடக்கு மாகாணங்களுடன் இணைக்கும் சலாங் சுரங்கப்பாதையில் எண்ணெய் தாங்கி ஒன்று கவிழ்ந்து தீப்பிடித்தது.

சில உடல்கள் கடுமையாக எரிந்து போயுள்ளதாகவும் இறந்தவர்களில் யார் ஆண், யார் பெண் என்பதை அடையாளம் காண்பது மிகவும் கடினமாக இருந்தது எனவும் பர்வானில் உள்ள மூத்த சுகாதார அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதனால் உயிரிழப்பு எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கலாம் என்று கருதப்படுகிறது. மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், அந்த பாதை போக்குவரத்துக்கு மூடப்பட்டுள்ளதாக பொதுப் பணித்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. (நி)

## திறப்பதற்கு முன்பே இடிந்து விழுந்த பாலம்
### பீகார் அரசியலில் பரபரப்பு

(டில்லி)

பீகார் மாநிலம் பெகுசாய் பகுதியில் உள்ள கந்தக் ஆற்றின் குறுக்கே 206 மீற்றர் நீளமுள்ள பாலம் மக்கள் பாவனைக்கு வரும் முதலே இடிந்து விழுந்துள்ளது.

கடந்த 2016 ஆம் ஆண்டு பாலம் கட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டது. 2017 ஆல் முடிவடைந்தது.

ஆனால், அணுகு சாலை இல்லாததால், பாலம் திறக்கப்படாமல் இருந்தது. நபார்டு வங்கி திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட இந்தப் பாலத்தின் முன்பகுதியில் விரிசல் ஏற்பட்டது.

இது குறித்து அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் அந்தப் பாலத்தின் முன்பகுதி இடிந்து விழுந்தது.

ரூ.13 கோடியில் கட்டப்பட்டு, திறக்கப்படும் முன்பே பாலம் இடிந்து விழுந்தது பீகார் அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. (நி)

## திருப்பதி ஏழுமலையான் ஆலயத்தில் ஒத்திகையின் போது குண்டுவெடிப்பு ஆக்டோபஸ் படைவீரர் காயம்

(டில்லி)

திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு வரும் முக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காகவும் அசம்பாவித சம்பவங்கள் நிகழ்ந்தால் தடுப்பதற்காகவும் ஆக்டோபஸ் அதிரடிப்படை எப்போதும் தயார் நிலையில் வைக்கப்பட்டு உள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் திருமலையில் ஆக்டோபஸ் படையினருக்கு வெடி குண்டுகளை செயல் இழக்க செய்வது, வெடி விபத்தில் சிக்குபவர்களை மீட்பது, கலவரத்தின் போது கண்ணீர்ப் புகை குண்டு வீசுவது உள்ளிட்ட பல்வேறு ஒத்திகை நிகழ்ச்சி நடந்தது. ஒத்திகையின் போது குண்டு ஒன்று வெடித்ததில் ஒருவர் காயமடைந்தார்.

ஒத்திகையின் போது வெடி குண்டு வெடித்து ஆக்டோபஸ் படை வீரர் படுகாயம் அடைந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. (நி)

## ஒரே நாளில் இரு ஏவுகணைகளை பரிசோதித்த வடகொரியா
### கொரிய தீபகற்பத்தில் பதற்றம் அதிகரிப்பு

(பியாங்யாங்)

அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளை அச்சுறுத்தும் விதமாக வடகொரியா தொடர்ச்சியாக ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது.

கடைசியாக கடந்த மாதம் 19 ஆம் திகதி அமெரிக்கா வரை சென்று தாக்கக்கூடிய "ஹவாசோங்-17" என்கிற ஐசிபிஎம் ஏவுகணையை வடகொரியா சோதித்தது. அதன் பிறகு எந்தவொரு ஏவுகணை சோதனையையும் வடகொரியா நடத்தவில்லை.

இந்த நிலையில் வடகொரியா நேற்று முன்தினம் ஒரே நாளில் கண்டம் விட்டு கண்டம் பாயும் 2 ஏவுகணைகளை சோதித்தது.

சுமார் ஒரு மணி நேர இடைவெளியில் வடகொரியா அடுத்தடுத்து 2 ஏவுகணைகளை ஏவி சோதித்ததாகவும் அந்த ஏவுகணைகள் கொரிய தீபகற்பம் மற்றும் ஜப்பானுக்கு இடையில் கடலில் விழுந்ததாகவும் தென்கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது.

ஒரு மாத இடைவெளிக்கு பின்னர் வடகொரியா மீண்டும் ஏவுகணை சோதனையை நடத்தியிருப்பதால் கொரிய தீபகற்பத்தில் பதற்றம் அதிகரித்துள்ளது. (நி)

## நடுக்கடலில் தத்தளிக்கும் ரோஹிஞ்யா அகதிகளின் படகு உதவுமாறு ஐக்கிய நாடுகள் சபை அழைப்பு

(ஜெனிவா)

150 ரோஹிஞ்யா அகதிகளுடன் தத்தளித்துக் கொண்டிருக்கும் படகொன்றிற்கு அந்தமான்கடற்பரப்பில்உள்ளநாடுகள் உதவ வேண்டும் என ஐ.நா வேண்டுகோள் விடுத்துள்ளது.

குறிப்பிட்ட படகு இரண்டு வாரகாலமாக நடுக்கடலில் தத்தளிக்கின்றது என ஐ.நா கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்துள்ளது. குறிப்பிட்ட படகிலிருந்து தொடர்பு கொண்டவர்கள் தங்களில் பலர் உயிரிழந்துள்ளனர்.

குறிப்பிட்ட சிறிய மீன்பிடி படகு மூன்று வாரங்களிற்கு முன்னர் பங்களாதேஷிலிருந்து புறப்பட்டது.

மூன்று வாரங்களாக கடலில் தத்தளித்த வண்ணமுள்ளது என ஐ.நா தெரிவித்துள்ளது. படகில் உள்ளவர்கள் மலேசியா செல்ல முயல்கின்றனர்.

திறந்த படகாக அது காணப்படுகின்றது. படகு புறப்பட்ட சில நாட்களில் அதன் இயந்திரம் பழுதடைந்துவிட்டது என ஐ.நா தெரிவித்துள்ளது. (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல தசாப்தங்களை கடந்தும்
உன் சேவை தொடர வாழ்த்துகின்றோம்

அருள்நாயகி
புத்தக நிலையம்







கண்டி வீதி, கொடிகாமம்.

மக்கள் மனங்களில் இன்றுபோல் என்றும் நிலைத்திட
மனமுவந்து வாழ்த்துகின்றோம்


SHETHRABALAKA
Book Shop



பத்திரிகைகள், சஞ்சிகைகள், பாடசாலை உபகரணங்கள், எழுது கருவிகள், காகிதாதிகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள்

Kandy Road, kodikamam.
Tel: 077 220 8366




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Shivahami
## Mahal




# சிவகாமி மஹால்

Adiyapatham Road, Thirunelvely,
021 205 2288 / 077 932 6147
Sivakaamymahal@gmail.com
www.shivahamimahal.com



எமது சிவகாமி மஹால் மண்டபத்திற்கு உங்களை அன்புடன் வரவேற்கின்றோம். மிகச் சிறப்பான சேவையை வழங்கும் பொருட்டு நவீன வசதிகளுடன் கூடிய மண்டபம், உணவு வகைகள், சொகுசு ஒழுங்குபடுத்தல்கள், நட்புறவான ஊழியர்களுடன் எமது சேவையை யாழ்.மண்ணில் ஆரம்பித்திருக்கின்றோம். உங்களின் மங்கலகரமான நிகழ்வுகளை எம்முடன் இணைந்து மேலும் சிறப்பாக அமைத்துக்கொள்ள எம்மை நாடுங்கள்!









S.Sugumaran
Proprietor
Nivessmns@gmail.com

# மிலேனியம்

உல்லாசப் பயணிகள் விடுதி மற்றும் உணவகம்

# Millennium

Guest House & Restaurants

Bedroom - 4500 /= AC / 4000/= Non A/C
4 Bed - 4000 /= AC / 3500/= Non A/C
3 Bed - 3500 /= AC / 3000/= Non A/C
2 Bed - 2500 /= AC / 2000/= Non A/C
24 Rooms உம் ஒன்றாக எடுத்தால்
3000/= படி 24 Rooms உம்





No. 76/60, Ramanathan Road,
(Campus Road) Kaladdy, Jaffna.
Tel :- 021 222 5876, 077 601 6310,
021 221 5195, 021 22 5196



தர்மத்தின் குரலாக ஒலிக்கும் வலம்புரியே வாழ்க!

# த.சங்கரப்பிள்ளை
## அன் சன்ஸ்

TS

பட்டுப் புடைவைகள்,
சாறி வகைகள்
மற்றும் அனைத்து விதமான
ஆடைத் தெரிவுகளுக்கும்
நாட வேண்டிய ஒரே இடம்



21, நவீன சந்தை,
மின்சார நிலையவீதி,
யாழ்ப்பாணம்.
021 222 9965

225C, மின்சார நிலைய வீதி,
(வைத்தியசாலை அருகாமை)
யாழ்ப்பாணம்.
021 221 5397


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின்

# 23 ஆம் ஆண்டு நின

## நல்லை ஆதீன சுவாமிகளின் அருளாசி



வலம்புரி-சங்குநாதம் நாளிதழ் இன்று தனது 24 ஆவது வயதில் கால்பதிப்பது அனைத்து மக்களுக்கும் மகிழ்ச்சியினைத் தருகிறது. பத்திரிகா தர்மத்தின் நெறியில் நின்று தனது பணியினை இன்று சர்வதேச ரீதியாக கால்பதித்திருப்பது அனைவருடைய உள்ளத்திலும் பெரு உவகையை ஏற்படுத்தி உள்ளது.

எந்த விடயங்களையும் துணிந்து நின்று கூறுகின்ற ஆற்றல் பத்திரிகை ஆசிரியருக்கு தனித்துவமானது. சமயம், பொருளாதாரம், அரசியல், கல்வி, வணிகம், விளையாட்டு மற்றும் அரசியல் தீர்வுக்கான வழிமுறைகளையும் ஆசிரியர் தலைமை தொடக்கம் அனைத்து விடயங்களையும் சிறப்பாக வெளிக்கொணரும் வலம்புரி பல ஆண்டுகள் பல வளர்ச்சிகளை கண்டு வாழ வாழ்த்துகின்றோம். இயக்குநர், ஆசிரியர்கள், செய்தி ஆசிரியர்களுக்கும்.விளம்பரதாரர்கள் அனைவருக்கும் இறையருளை சிந்திக்கின்றோம். **"என்றும் வேண்டும் இன்ப அன்பு"**

**இரண்டாவது குருமஹா சந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.**

## தமிழினத்தின் முதுகெலும்பு



தமிழ் உலகு நன்கறிந்த நாளிதழ் வலம்புரி தனது 23 ஆவது அகவை நாளினை கொண்டாடுவதையிட்டு நானும் பெருமகிழ்வடைகின்றேன். தமிழினத்தின் முதுகெலும்பாக இருந்து காத்து வருகின்றது வலம்புரி. இன ஒற்றுமையை மத ஒற்றுமையை சீர்குலைப்பது, கலாசார விழுமியங்களை அழிப்பது. நல்லொழுக்கத்தினை இளையோர் மத்தியில் சீர்குலைப்பது குறிப்பாக சைவத்தினை அடிவேரோடு பிடுங்கி எறிவது என பல வழிகளில் சைவத் தமிழினம் காலத்திற்கு காலம் அழித்தொழிக்கப்பட்டு வருகின்றது. வலம்புரியின் வருகையும் வலம்புரியின் துணிகரமான ஆசிரிய தலையங்கம், செய்திகள், கட்டுரைகள் என்பன சைவத் தமிழினத்தின் காப்பரணாக அமைந்துள்ளது.

எச்சந்தர்ப்பத்திலும் அநீதிக்கு விலைபோகாமல் தன்அறம் காத்து நின்றொழுகின்றது. வலம்புரியின் எழுத்து மக்களின் சிந்தனையைத் தூண்டுகின்றது. வலம்புரியின் எழுத்தாற்றலால் மக்களின் சிந்தனையில் ஏற்பட்ட மாற்றங்களை கடந்த காலத்தில் நடைபெற்ற பல மக்கள் பேரணிகள்,தேர்தல் வெற்றிகள் நன்கு எடுத்துக்காட்டுகின்றன.

சைவத் தமிழினத்தின் வாழ்வின் விடிவிற்கான வெளியீடாக வெளிவந்து கொண்டிருக்கும் வலம்புரி இயக்குநர்கள்,பிரதம ஆசிரியர், முகாமையாளர், செய்தியாளர்கள் மற்றும் வாசகர்கள் அனைவருக்கும் அகவை நிறைவு நன்னாள் வாழ்த்துக்களைத் தெரிவித்து ஸ்ரீ சரஸ்வதி அம்பாளின் கருணை எப்பொழுதும் அறம் நின்று காக்கும் வலம்புரியின் பணிகளுக்கு துணைநிற்கப் பிரார்த்தித்து ஆசிர்வதிக்கின்றேன்.

**சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள்,**
**குருமுதல்வர் வீணாகான குருபீடம் ,**
**ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் உபதேசத்திருக்கோவில், சண்டிலிப்பாய்.**

## நடுவுநிலை தவறாத நாளிதழ்



யாழ்ப்பாண மண்ணின் பொறுப்பான ஊடகமாக செயற்பட்டு உள்ளதை உள்ளபடி மக்களுக்கு வெளிப்படுத்தி தர்மத்தின் குரலாக ஒலித்துக் கொண்டிருக்கும் வலம்புரிப் பத்திரிகை தனது 23 ஆவது ஆண்டு நிறைவில் மலரும் சங்குநாதம் சிறப்பி தழுக்கு வாழ்த்துச் செய்தி வழுங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். ஊடகங்கள் மக்களின் மனதை வெல்லக்கூடிய அம்சங்களை கொண்டிருக்கும் நோக்கோடு பல்வேறு சுவையான தகவல்களைத் தருவதால் அதன் வாசகர் வட்டம் அதிகரிக்கின்றது. **"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்"** என்னும் பொன்மொழிக்கு ஏற்ப பல்வேறு தகவல்களை யாழ்ப்பாண மக்களுக்கு மட்டுமின்றி தமிழ் ஆர்வலர் அனைவரையும் தன்பால் ஈர்க்கும் திறனும் வலம்புரிப் பத்திரிகைக்கு ஏராளமாகவே உண்டு எனலாம்.

அத்துடன் வலம்புரிப். பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் அனைவரும் விரும்பிப் படிக்கும் வகையில் சிறப்புச் செய்திகளைத் தருவதோடு,விளையாட்டுச் செய்திகள், வணிகச் செய்திகள்,உலகச் செய்திகள், விவாத அரங்கு, விளம்பரங்கள், நிழல் படங்கள் என அனைத்து அம்சங்களுடனும் இப்பத்திரிகை கடந்த 1999 ஆம் ஆண்டிலிருந்து தன் பணியை சிரமேற் கொண்டு வரும் அதே நேரம், நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் நாளிதழாக செயற்படுவது இதன் சிறப்பை வெளிப்படுத்துகின்றது.

இருபத்து மூன்று ஆண்டுகளைக் கடந்து இருபத்து நான்காவது ஆண்டில் கால்பதிக்கும் வலம்புரிப் பத்திரிகை தொடர்ந்து தனது பாதத்தை நிலையாக ஊன்ற என் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

**கணபதிப்பிள்ளை மகேசன். அரசாங்க அதிபர்,**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

## தர்மத்தினின்று விலகாத நாளிதழ்



எமது பிரதேச மக்களின் வாழ்வியல் மேம்பாட்டை தனது தாரக மந்திரமாகக் கொண்டு கலை, கலாசாரம், ஆன்மிக சமூகப் பொறுப்புக்கள் யாவற்றினதும் அடி நாதமாக விளங்குகின்ற "வலம்புரி" புதிய அகவையில் அடியெடுத்து வைப்பதில் பெருமகிழ்வு அடைகின்றோம்.

பத்திரிகை தர்மத்தினின்றும் சற்றேனும் விலகாது நடுநிலை பேணி மக்களின் வாழ்வியல் விழுமியங்களை பேணும் வகையில் செய்திகளை உடனுக்குடன் வழங்குவதில் ஈடு இணையற்ற சேவையினை வழங்குவதில் தனக்கென தனியிடம் கொண்டது பாராட்டுக்குரியதாகும்.

இன்றைய மக்களின் வாழ்வியல் நிலைமைகளுக்கேற்ப, சமூக பாதுகாப்பு தொடர்பான ஆக்கபூர்வமான செய்திகள், ஆன்மிகம் தொடர்பான காத்திரமான கட்டுரைகள், மக்களின் ஆரோக்கியம் தொடர்பான காத்திரமான தொடர் விளக்கங்கள், கலை கலாசார மேம்பாடுகள் தொடர்பான ஆவணமாக்கல்கள், அரசியல் நிலைமைகளில் செய்நெறிகள், வெளிநாட்டு செய்திகள், பொருளாதார நிலைமைகள் தொடர்பான விழிப்புணர்வுகள் என்பவற்றின் காத்திரமான படைப்புகளால் வலம்புரி முதன்மை பத்திரிகையாக சிறப்புறுகின்றது.

காலத்தின் தேவையறிந்து காத்திரமான ஆசிரியர் தலையங்கத்தினால் வாசகர் அனைவரையும் கவர்ந்து சிறப்புறுவது வலம்புரியாகும். வாசகர்கள் அனைவரும் நிலைமைகளுக்கேற்ப பொருத்தமான செய்திகள், விடயதானங்கள், தொடர்கட்டுரைகள், நிகழ்வுகளின் ஒளிப்படங்களுடன் கூடிய விளக்கங்கள்,ஆசிரிய தலையங்கங்கள் என்பவற்றை நிறைவாக வழங்கி வரும் "வலம்புரி" அடுத்து வரும் அகவைகளிலும் நிறைவான சேவையை வழங்கி ஞாலம் எல்லாம் புகழ் பரப்ப வேண்டுகின்றோம்.

**தேசமான்ய கலாநிதி சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள்,**
**தலைவர், இந்து குருமார் ஒன்றியம்.**

## உயர் தர்மம் நிறைந்த பத்திரிகை



வடக்கில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளில் வலம்புரி பத்திரிகைக்கு தனித்துவம் உண்டு. உண்மையான செய்தியை உறுதிப்படுத்தி வெளியிடும் பண்பாடு இப்பத்திரிகையின் உயர் தர்மம் எனலாம்.

இன்று ஊடகத்துறை என்பது பலரும் பங்குகொள்ளும் ஒரு திறந்த கட்டமைப்பாகிவிட்டது. எவர் செய்தியை தந்தாலும் அச் செய்தியை நல்ல முறையில் வழங்க வேண்டியது ஊடகத்துறையின் பெரும் கடமையாகும். வலம்புரிப் பத்திரிகை இப்பண்பாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி சீராகத் தன் பணி செய்கிறது. அதனால் கற்றோர் மத்தியில் வலம்புரி பற்றிய கணிப்பீடு உயர்வாக உள்ளது.

கடந்த இருபத்து மூன்று ஆண்டுகளாக தமிழர்களின் வாழ்வுக்காக அரிய சேவை ஆற்றி வரும் வலம்புரிப் பத்திரிகைக் குடும்பத்திற்கு எனது இதய பூர்வமான நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து நல்லதைச் செய்யுங்கள். எம் மண்ணில் எம் சமூகம் சீராக வாழ்வதற்கு நல்வழி காட்டுங்கள். தாங்கள் பணி தொடர சிவப்பரம்பொருளைப் பிரார்த்திக்கிறேன்.

**ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள்,**
**ஸ்ரீ சுப்பிரமணிய கோட்டம். கோப்பாய்.**

## காலத்தின் தேவை அறிந்த சேவை



இருபத்து நான்காம் ஆண்டில் கால்பதிக்கும் வலம்புரி-சங்குநாதம் பத்திரிகையானது காலத்தின் தேவை அறிந்து துணிச்சலுடனும் நடுவு நிலைமையுடனும் பெரும் சேவை யாற்றி மக்களின் பேரபிமானத்தை வென்றிருக்கிறது.

அத்துடன் மக்களின் ஆரோக்கிய மேம்பாட்டிற்கான சுகாதார விழிப்புணர்வு் தகவல்களை தொடர்ந்து பிரசுரித்தும் அதற்கான களங்களை "ஏற்படுத்திக் கொடுத்தும் சுகாதாரத் துறைக்கு பெரும் சேவையாற்றி வருகிறது.பத்தரிகைத் துறையிலே "வலம்புரி-சங்குநாதம்" ஆற்றிவரும் அளப்பரிய சேவைகளை பாராட்டுவதுடன் இதன் பணிகள் தொடர்ந்து வளர்ச்சி பெற வாழ்த்துகிறேன்.

**Dr.சி.சிவன்சுதன், மருத்துவ நிபுணர்.**

## உண்மையி



வலம்புரி நாளிதழ் தமிழ் ம
மூன்று ஆண்டுகள் நிறைவடைகில
கள் எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்
ஆத்மிக, கலை,கலாசார செய்திகள்,
போடு வெளிவரும் வலம்புரி உண்ன
என்றும் வெளியிட்டதில்லை.

அத்தகு சிறப்புடைய வலம்புரி அகவை
இன்று போல் என்றும் வாழ வளர
தில் மென்மேலும் வளர்ச்சி பெற இல

**சிவஸ்ரீ.தா.மகாதே**
**அதிபர்,தர்மசாஸ்தா, குருகுல**

## வலம்புரியின் வெற்றிக்கு




ஒரு நாட்டின் இறைமைக்கு
திற்கும் சமூகத்தால் மேற்கொண்டு
அவசியமோ அந்தளவுக்கு ஒரு
அவசியமாகும். இந்நிலையை
பத்திரிகை சிறந்த விளங்குகின்றது

ஒரு பத்திரிகை நடுநிலைமை
பேணி வருவதன் மூலம் தான்
முடியும்.இவ்வகையில் வலம்புரி
ஆவது அகவையை பூர்த்தி செய்
பதிப்பதையிட்டு நாம் பெருமைப்படு
இடம்பெறும் ஆசிரியர் தலையங்க
செயற்பாடுகளுக்கு அமைவாக பா
வதோடு மக்களின் மனதில் ஓர்
கொண்டு வரும் செயற்பாடா து

பத்திரிகையின் வளர்ச்சிக்கு உ
பணியாற்றும் வலம்புரி காரியாலய
மேலும் உறுதியுடன் செயலாற்ற
வலம்புரி நாளிதழ் போற்றத்தக்க வ
வேல் பெருமானின் அருளை வேண்

**குரு பணியில் செ.மே**
**சந்நிதியான் ஆச்சிரம**

## துணிச்சல் மி



நாட்டின் வளர்ச்சிக்கு ஒரு
வரலாறே, வலம்புரி நாளிதழின் வ
களுக்கு சுயநலமற்ற சேவை செய்
ஆண்டில் அடியெடுத்து வைத்திருப்

இவ் வலம்புரி நாளிதழ் அரசிய
கம், காவியத்தொடர்கள்,ஆன்மிக
பல்வேறு ஆக்கங்களைத் தாங்
களின் கைகளில் தவழ்ந்து கெ
ஆண்டுகளில்,நாட்டு நலனுக்காக
சிந்தித்ததும் சாதித்ததும் பல. அ
வாசகர்கள் துணையோடு வென்

வாசகர்களின் நீங்காத ஆத
உத்வேகத்துடனும் துணிச்சலே
வெற்றிப் பயணத்தைத் தொடர்
நாளிதழை நெஞ்சார வாழ்த்துகி

**டாக்டர்.திருமதி.**
**சிரேஷ்ட விரிவுரையா**
**யாழ்.பல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றைவு சிறப்பு மலர்- 2022

## யின் குரல்



மண்ணில் கால்பதித்து இருபத்து
கின்றன. வட பகுதியில் தின்சரி மக்
பார்க்கும் பத்திரிகை வலம்புரியாகும்.
ள், அரசியல் செய்திகள் எல்லாம் சிறப்
ன்மைக் குப் புறம்பான செய்திகளை

கவை 24 இல்கால்பதிக்கும் இவ்வேளை
ார ஆசீர்வதிக்கிறேன். வருங்காலத்
இறை வனைப் பிரார்த்திக்கின்றேன்.

**ாதேவக் குருக்கள்**
**தலம் கயாத்ரீபீடம், இணுவில்**

## த அதன் தர்மமே காரணம்



க்கும் பண்பாட்டிற்கும் கலாசாரத்
ன்டு வரும் விழுமியங்கள் எவ்வளவு
ரு பத்திரிகையின் செயற்பாடும்
ப பேணிக் காப்பதில் வலம்புரிப்
றது என்பதில் சந்தேகம் இல்லை.
ம தவறாமல் பத்திரிகைத் தர்மத்தை
் அப்பத்திரிகை வளர்ச்சி அடைய
ரி நாளிதழ் தமிழ் மண்ணில் 23
ய்து 24 ஆவது அகவையில் கால்
டுகின்றோம். குறிப்பாக வலம்புரியில்
ங்கம் ஆனது நாட்டில் நடைபெறும்
பாராட்டியும் கண்டித்தும் வெளியிடு
எழுச்சியையும் உத்வேகத்தையும்
பாரா[illegible]க்குரிய விடயம்.
உறுது[illegible]ணயாக அர்ப்பணிப்பு டன்
யத்தைச் சார்ந்த அனைவரும் மென்
வும் அத்த கைய பணியின் மூலம்
வகையில் வெளிவர வாழ்த்தி சந்நிதி
ண்டி நிற்கின்றோம். **"சுபம் சாந்தி"**

**மோகனதாஸ் சுவாமிகள்,**
**மம், தொண்டைமானாறு.**

## மிக்க வலம்புரி



ரு நாளிதழின் எழுத்து காரணமான
வரலாறு. வலம்புரி தமிழ் நாளிதழ், மக்
து 23 ஆண்டுகளைக் கடந்து 24 ஆம்
பதை அறிந்து பெருமைப்படுகின்றேன்.
பல்,கல்வி, விளையாட்டு, சிறுவர் அரங்
கக் கட்டுரைகள், மருத்துவம் போன்ற
கி தினந்தோறும் வலம்புரி வாசகர்
காண்டு இருக்கின்றது. இந்த 23
கவும் மக்கள் பணிக்கா கவும் வலம்புரி
அப்போது, சந்தித்த தடைக்கற்களை
ன்றும் வந்திருக்கிறது.
தரவோடு 1999 இல் பிறந்த அதே
லாடும் 23 ஆண்டுகளைத் தொட்டு
ர்கிறது. இந் நன்நாளில் வலம்புரி
ின்றேன்.

**விவியன் சத்தியசீலன்,**
**ாளர் சித்தமருத்துவ அலகு,**
**கலைக்கழகம்.**

## யாழ் ஆயரின் ஆசிச் செய்தி



வலம்புரிப் பத்திரிகை 2022 ஆம் ஆண்டில் தனது 24 ஆவது ஆண்டில் காலடி பதிக்கின்ற வேளை வலம்புரி பத்திரிகை நிர்வாக இயக்குநர்கள் - பிரதம ஆசிரியர் திரு.ந.விஜயசுந்தரம் - உதவி ஆசிரியர்கள் - செய்தியாளர்கள் - ஊடகப் பணியாளர்கள் அடங்கிய வலம்புரிப் பத்திரிகைக் குடும்பத்தைப் பாராட்டி வாழ்த்துக்களைத் தெரிவித்து எதிர்வரும் ஆண்டை மகிழ்வோடும் தமிழ் மக்களின் சுபீட்சமான எதிர்காலத்திற்கு வழிவகுக்கும் பல புதிய திட்டங்களோடும் எதிர்நோக்குங்கள் என வாழ்த்துகிறோம்.

கடந்த பல் ஆண்டுகளாக வலம்புரிப் பத்திரிகையின் பல ஆண்டு நிறைவுகளில் எமது ஆசிச் செய்திகளில் வலம்புரிப் பத்திரிகையின் பன்முகப் பலங்களைப் பற்றித் தெரிவித்திருந்தோம். அவை எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தாற்போல் வலம்புரிப் பத்திரிகை இனி ஒப்பாரும் மிக்காரும் அற்ற ஒரு பத்திரிகையாக வளரும் எனத் தெளிவாகத் தெரிவிக்க விரும்புகிறோம்.

வ்லம்புரிப் பத்திரிகையின் அச்சுப்பதிவு அழகாகத் தெளிவாக உள்ளது - செய்திகள் துல்லியமாக ஐயம் திரிபற அமைகின்றன. - செய்தித் தலைப்புக்கள் செய்தியைப் படிக்க அழைக்கும் விதமாக உள்ளன - பக்க வடிவமைப்பு பக்கத்திற்குப் பக்கம் கவர்ச்சிகரமாக கண்ணைக் கவரும் விதமாக உள்ளது. - படங்கள் அச்சொட்டாக தெளிவாக உள்ளன.

முன்னர் ஓர் ஆசிச்செய்தியில் நாம் தெரிவித்தது போல் வலம்புரிப் பத்திரிகையின் பலம் அதன் தரம்மிக்க ஆசிரியர் தலையங்கம் ஆகும். அதுவே பத்திரிகையின் பலமான எதிர்கால இருப்பிற்கும் பொருளாதார விற்பனைக்கும் ஒரு முக்கிய காரணமாக அமைகிறது என்றால் மிகையாகாது.

வலம்புரிப் பத்திரிகையைப் படிப்பது ஓர் இதமான இனிமையான அனுபவமாக உள்ளது. இன்றைய நவீன சவால்கள் மத்தியில் வலம்புரிப் பத்திரிகை தன் பணியினை இனிதே தொடர இறையாசிர் வழங்குகி வாழ்த்துகிறோம்.

**மேதகு கலாநிதி.**
**ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை**
**யாழ்.ஆயர்**

## ஊடக விழுமியங்களைப் பேணுகின்ற நாளிதழ்



வடபகுதியில் வெளிவரும் அச்சு ஊடகங்கள் யாவுமே தனித்துமானவை. சமூகத்தினதும் வாசகர்களதும் தேவை, இரசனைக்கு ஏற்ற ஆக்கங்களை பிரசுரிப்பதனூடாகத் தம்மைக் தகவமைத்துள்ளன. அந்தவகையில் வலம்புரி நாளிதழ் நீண்ட தொடர்களை, குறிப்பாக வரலாற்று முக்கியத்துவம் மிக்கதும் நூலுருவில் வெளிவராததுமான கலாநிதி. தவலிங்கம் அவர்களது பல கட்டுரைத் தொடர்களை, பல ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக வெளியிட்டு வருவது பாராட்டுதற்குரியது.

ஊடக விழுமியத்தைப் பேணுவதிலும் செய்திகளைப் பிரசுரிப்பதிலும் வலம்புரி ஆசிரியர்கள் காண்பிக்கும் நிதானம் சிறப்பானது. வலம்புரியின் ஆசிரியத் தலையங்கங்கள் பலராலும் விரும்பி வாசிக்கப்படுபவை. மக்களது பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்து தீர்வுகளைப் பெற்றுத் தந்திருக்கின்றன.

சமகாலத்துக்கேற்ற ஆக்கங்கள், கட்டுரைகளை வரைவதிலும் வாசகர்கள்து எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்வதிலும் இவ்வூடகம் ஆர்வத்துக்குரியதாகிறது.

மாணவர்களிடத்திலும் இளந்தலைமுறையினரிடமும் வாசிப்பை ஊக்குவிப்பதில் வலம்புரியின் தொடர்கள் ஆர்வத்தைத் தூண்டுபவை. பொன்னியின் செல்வன் திரைப்படம் வெளிவந்து சில காலத்தில் கல்கியின் பொன்னியின் செல்வன் நாவலைத் தினசரிப் பத்திரிகையில் வலம்புரி தொடராக வெளியிட்டு வருவது வாசகர்களை ஈர்க்க வல்லது.

இன்றைய நாள் இன்னொரு புதிய ஆண்டில் கால்பதிக்கும் வலம்புரி நாளிதழ் பல்லாண்டு காலம் வாழ்ந்து ஊடகப் பணியாற்ற இறைவனை வேண்டி வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**வைத்திய கலாநிதி. த. சத்தியமூர்த்தி,**
**பணிப்பாளர்,**
**போதனா மருத்துவமனை, யாழ்ப்பாணம்.**

## முழங்கட்டும் சங்குநாதம்



பாரதப் பெரும் போரில் கிருஷ்ண பரமாத்மாவின் வலம்புரியான பாஞ்ச சன்யம் எவ்வாறு தர்மத்தை நிலைநாட்ட முழங்கிற்றோ அது போலவே யாழில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளில் தர்மத்தின் குரலாக வெளிவந்து கொண்டிருக்கும் நாளிதழான வலம்புரி 20.12.2022 இல் தன் அகவை நாளில் தடம்பதிக்கிறது.

நடுவுநிலை தவறாத நன்நெறி காக்கம் உங்கள் நாளிதழ் என்ற மகுடவாசகக் கருப்பொருளில் கடந்த 23 ஆண்டுகளாக முழங்கி வரும் வலம்புரி நாளிதழ் ஞாயிற்றுக்கிழமைகளில் வாராந்தரியான சங்குநாதமாக அவதாரம் எடுக்கிறது. இது அர்ஜுனன் கையிலுள்ள வலம்புரியான தேவதத்தம் போல் ஒலி எழுப்புகிறது. பாஞ்ச சன்யமும் தேவதத்தமும் எவ்வாறு ஒலியெழுப்பி பாரதப் போரில் தர்மத்தை நிலைநாட்டியனவோ அது போலவே யாழில் இருந்து வெளிவரும் வலம்புரியும் சங்குநாதமும் மக்கள் மனங்களில் நடுவுநிலை தவறாது செய்திகளை புதுமை மறவாமல் புத்துருவில் வழங்கி வருகின்றன.

ஒரு நாளிதழ் வெளியிடுவது அதுவும் யாழ்ப்பாணத்தில் தமிழ் நாளிதழ் வெளியிடுவது அனல் மேல் பனித்துளியை கொண்டு செல்லும் முயற்சியை ஒத்தது. வலம்புரி, மக்கள் விருப்பங்களை அறிந்து உடன் செய்திகளை சூடாகவும் அரசியல், விளையாட்டு, நவீனங்கள், ஆலடி மாநாடு, இராசிபலன்கள், உலகச்செய்திகள், ஆசிரியர் தலையங்கம் எனும் களங்களில் விளக்கப்படங்களுடன் இலகுவாகப் பயணப்பட்டு மக்கள் மனம் கவர்ந்த நாளிதழாக மிளிர்கின்றமை கண்கூடு. வலம்புரியின் சேவைக்காலம் தொடர்ந்தும் பல நூற்றாண்டுகளாக பல்கிப் பெருகி நொடிதுயர்ந்து நீடுவாழ ஆசி வழங்க அடியேன் இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்த வாய்ப்பளித்த ஆசிரியர் குழாமிற்கு அருட்பார்வை மிக்க நன்றிகள்.வலம்புரியின் மக்கள் சேவை தடையின்றித் தொடர அம்பிகையின் அருள் வேண்டிப் பிரார்த்திக்கும் அடியேனின் ஆசிகள் என்றென்றும் தங்களைச் சேர்வதாக.

**சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிக தேசிகர் J.P**
**பிரதம குரு வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்.**
**ஆதீனகர்த்தா தென்புலோலியூர் புற்றளைச்**
**சித்தி விநாயகர் தேவஸ்தானம் இந்துமத குருபீடாதிபதி.**

## களம் பல படைத்த வலம்புரி



பத்திரிகைத் தர்மத்தின் இலக்கணமாகத் திகழும் வலம்புரிச் சங்குநாதம் தனது 23 வருட வெளியீட்டின் மூலம் தமிழ் மணம், அறப்பணி, அன்புப்பணி, ஆன்மிகப்பணி, அரசியல் களம், ஆலடிக்களம், இலக்கிய களம், புராணக் களம், ஆயுள்வேதக் களம், ஆங்கில வைத்தியக் களம், காலத்தின் தேவைக்கேற்ப ஆசிரியக் கருத்துக் களம், இன்றைய இளைஞர்களுக்கான எழுத்துக் களம், மேலும் பாலர் முதல் முதியவர் வரை விரும்பிப் படிக்கும் முகநூல் களம், மாணவச் செல்வங்களின் கல்விக்களம், சந்தைக் களம், எமது அரசியல்வாதிகளின் மனக்களம், மழலைகளின் அம்புலிமாமா கதைக்களம் என பல களங்களை தன்னகத்தே தாங்கி ஒலித்துக் கொண்டிருக்கும் வலம்புரியின் தர்மஒலி 23 வருடங்களைத் தாண்டி 20.12.2022 இல் 24 ஆவது ஆண்டில் உரக்க ஒலிக்கவிருக்கின்றது என்பதை எண்ணும் போது சைவசமயக் குருமார்களாகிய நாம் எல்லோரும் பேருவகையடைகின்றோம். மேலும் மேலும் வலம்புரிச் சங்குநாதம் களம் பல கண்டு பல்லாண்டு பல்லாண்டு உரத்தொலிக்கட்டும். மேலும் வலம்புரிச் சங்குநாதம் நாளிதழின் பிரதம ஆசிரியர் முதல் அனைத்து பணியாளர்களுக்கும் எமது நல்லாசிகளும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

**சிவஸ்ரீ ச.மகாலிங்க சிவக்குருக்கள்**
**அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபை.**

## எழுச்சியை ஏற்படுத்திய நாளிதழ்



வலம்புரி நாளிதழ் இருபத்து நான்காவது ஆண்டில் கால் பதிப்பது மட்டற்ற மகிழ்ச்சி தருகிறது. இருபத்து நான்கு ஆண்டுகளுக்கு முன் வலம்புரியின் எழுச்சிக் காலம் இப்போது நினைவில் இருக்கிறது. அப்போதெல்லாம் எங்களூரில் வலம்புரியைப் பெற்றுப் படிப்பவர்கள் விரல் விட்டு எண்ணத்தக்கவர்கள். அவர்களில் நாமும் ஒருவர். அக்கால வடபுல இதழியலில் ஒரு மாற்றத்தை-எழுச்சியை நாம் வலம்புரி வழியே எதிர்பார்த்தோம். அவ்வகையில், வலம்புரி தன் பாதையை செப்பனிட்டுப் பயணிக்கிறது. முக்கியமாக, சைவ சமயிகளுக்கு ஏதும் இடர் வரின் வலம்புரி தயங்காமல் குரல் கொடுக்கிறது. சைவ அறத்தை உரத்து உரைக்கிறது.

அது சமயப்பத்திரிகை அல்ல ஆனாலும் சமய விரோதச் செய்திகளை சில ஊடகங்கள் வலிந்து சொல்கிற போது வலம்புரி எம் மண்ணில் பெரும்பாலானோர் கைக்கொள்ளும் சமய நீதிக்குப் புறம்பாகப் பேசாமல் அந்நீதி நெறி நிற்கிறது. ஆக வலம்புரி ஆண்டு விழா பிள்ளையார் நோன்புக்காலத்தில் தான் பெரும்பாலும் வரும். இந்த ஆண்டும் அவ்வாறே அமைகிறது.


அந்த வேழமுகத்து வலம்புரி நாதன் அருளாலும் எம் வழிபடு தெய்வமான வள்ளி மணாளன் கருணையாலும் நூறாண்டு வலம்புரியின் ஓசை எங்கணும் கேட்கட்டும் என வாழ்த்துகின்றோம். இயக்குநர், ஆசிரியர், பணியாளர்கள், ஆர்வலர்கள் உள்ளிட்ட பரந்த வலம்புரிக் குடும்பத்திற்கு எமது வாழ்த்துக்களும் நல்லாசிகளும் உரித்தாகுக.

**"நீர்வை மணி" சிவஸ்ரீ கு.தியாகராஜக்குருக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரியின் 23 ஆம் ஆண்டு நிறைவு சிறப்பு மலர்- 2022

## தமிழ் மக்களின் காவலன்



நாட்டைக் காக்கும் வீரரின் பணியை இன்று பத்திரிகைகள் செய்கின்றன என்றார் ஒரு பேரறிஞர்.

வலம்புரி தமிழ் மக்களின் காவலனாகப் பணி புரிவதனைக் கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். ஆசிரியத் தலையங்கமும் ஆலடி மாகாடு என மகுடமிட்டு எழுதப்படும் கட்டுரைகளும் நம்மைச் சூழ்ந்து வரும் ஆபத்துக்களை விளக்குகின்றன.

இருபத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட வலம்புரி பல தடைகளையும் பல சூழ்ச்சிகளையும் உடைத்தெறிந்து வெற்றிநடை போடுகின்றது. நிதானம் அதன் சீர்மை. தமிழ் மக்களின் காவலனாக வலம்புரி சிரஞ்சீவி தன்மையுடன் வாழ என் இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

**எஸ்.ஜெபநேசன்**
**முன்னாள் பேராயர் – தென்னிந்திய திருச்சபை.**


## அகவை 24 இல் கால்பதிக்கும் வலம்புரியே நீ நீடூழி வாழ்க!



வலம்புரி நாளிதழ் கடந்த 23 ஆண்டுகளாக மக்களுக்கு ஆற்றிவரும் சேவை மகத்தானது. தனித்துவமானது. பல்வேறு சவால்கள் மத்தியிலும் அவற்றுக்கு ஈடுகொடுத்துத் தர்மத்தின் குரலாக இது ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கிறது. இக்காலப் பகுதியில் நமது சமுதாயம் சந்தித்த சோதனைகளும் வேதனைகளும் அழிவுகளும் ஈடுசெய்ய முடியாதவை. இருந்தும் எமது பலம் நமது முன்னோர்கள் காட்டிச் சென்ற அறநெறி வாழ்வின் வழி ஒழுகுதலே என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டு மக்களின் மனச்சாட்சியைத் தூண்டி அவர்களை நல்வழிப் படுத்தும் சாதனமாகவே இதன் ஆசிரியர் தலையங்கங்கள் அமைந்துள்ளன. இதனால் இவை தனித்துவமானவை. மக்களை விரும்பிப் படிக்கத் தூண்டுபவை. இத்தகைய பெரும் பணியைக் கடும் பணியை எத்தகைய சவால்கள் வந்தாலும் இப்பத்திரிகை தர்மத்தை கடைப் பிடித்து மக்களை நல்வழிப்படுத்தும் சாதனமாக நமது சமுதாயத்தின் திசைகாட்டியாக விளங்க எல்லாம் வல்ல அப்பரம்பொருள் துணை நிற்க வேண்டுமென்று பிரார்த்திப்போமாக.

**பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்.**

## எத்துயர் வரினும் நிமிர்ந்து நிற்கும் வலம்புரி



வலம்புரிப் பத்திரிகை தனது 23 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இவ்வேளையில் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் பேரானந்தம் கொள்வதுடன் தொடர்ந்தும் மக்களுக்குச் செய்திப் பணியாற்ற இறைவனின் ஆசிகளையும் வேண்டுகின்றேன்.

வலம்புரிப் பத்திரிகை யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்ட செய்திப் பத்திரிகையாக கடந்த 23 ஆண்டுகளாக இடையறாத் தொடராகத் தமிழ் மக்களுக்குச் செய்திப்பணி ஆற்றுவதற்காகப் பல சவால்களை எதிர்கொண்டு சாதனைகள் பலவற்றை நிலைநிறுத்தி "எத்துயர் வரினும் நிமிர்ந்து நிற்பேன் தொடர்ந்து வருவேன்" என தனது செய்திப் பணியினை மேற்கொண்டு வருகின்றது. அந்த வகையில் வலம்புரிப்பத்திரிகைக் குடும்பத்தின் ஆசிரியக் குழுவினர். செய்தியாளர்கள். நிர்வாகிகள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். வலம்புரி நாளிதழ் தனது நீண்டகால அனுபவத்துடன் செய்திப்பணியை மேலும் சிறப்பாக ஆற்ற வேண்டுமென வாழ்த்தி வலம்புரியின் வளர்ச்சிக்கும் தொடர்ச்சிக்கும் எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி.றூ.கேதீஸ்வரன், அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர், கிளிநொச்சி மாவட்டம்.**

## சர்வதேசத் தரம்மிக்க ஆசிரியர் தலையங்கம்



வலம்புரி நாளிதழின் 23 அகவை நிறைவை ஒட்டி வெளிவரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

இப்பத்திரிகை கடந்த காலங்களில் எதிர்கொண்ட பல இடர்பாடுகளைக் கடந்து வெற்றி நடைபோடும் நிலையில் 2020 இல் நாட்டில் ஏற்பட்ட "கொவிட் 19" இன் பதிப்பாலும் ஊரடங்குகளாலும் பொருளாதாரச் சுருக்கத்தாலும் மேலும் 2022 இல் ஏற்பட்ட அரசியல் குழப்பம். எரிபொருள்-இடுபொருள் பற்றாக்குறைவு. பணவீக்கம். நிரம்பல் சங்கிலியில் ஏற்பட்ட முறிவு. மக்களின் நுகர்வுச்சுருக்கம் போன்ற காரணிகளாலும் பாதிப்புக்குள்ளாகியிருந்தது.

எனினும் நிலைமைக்குத் தகுந்தபடியான சிறந்த முகாமைத்துவம்.பணியாளர்களின் அர்ப்பணிப்பான சேவை. பத்திரிகை வாசகர்களின் ஆதரவு பத்திரிகையின் தரம் ஆகியவற்றால் வலம்புரி இன்றும் சிறப்பாக வெளிவந்து கொண்டிருப்பது மிகவும் பாராட்டிற்குரியது.

வலம்புரி நாட்டின் முன்னேற்றத்துக்காகவும் தமிழ் மக்களின் உரிமைக்காகவும் சைவ மதத்தின் நிலையான இருப்புக்காகவும் மேன்மைக்காகவும் பாதிப்புக்குள்ளான பல்வேறு சமூகப்பிரிவினரின் விடிவுக்காகவும் பின்தங்கிய கிராமங்களின் பிரதேசங்களின் வளர்ச்சிக்காகவும் மனித உயர் விழுமியங்களுக்காகவும் தமிழ் பண்பாட்டு மேம்பாட்டுக்காகவும் இடையாறது குரல் கொடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.


சமூகத்தில் பல்வேறு பொறுப்புக்களை வகிப்போரின் பணிகளில் நிறைகாணின் அவற்றைப் பாராட்டவும் குறைகாணின் சுட்டிக்காட்டவும் வலம்புரி என்றும் பின்னிற்பதில்லை.

சமூகத்தின் சகல பிரிவினருக்கும் ஏற்ற விடயங்களைத் தாங்கி வரும் இப்பத்திரிகையின் ஆசிரிய தலையங்கங்கள் மிகவும் காத்திரமானவையாகவும் சர்வதேச பிரபல பத்திரிகைகளின் ஆசிரிய தலையங்கங்களின் தரத்திற்கு ஒத்ததாகவும் இருப்பதோடு சமூகத்தலைவர்களினதும் வாசகர்களினதும் கவன ஈர்ப்பை பெற்றதாகவும் விளங்குவது பாராட்டிற்குரியது.

வாழ்க வலம்புரி. தொடர்க நின்பணி.

**பேராசிரியர்.பொ.பாலசுந்தரம்பிள்ளை,**
**வாழ்நாள் பேராசிரியர், முன்னாள் துணைவேந்தர்.**

## நடுவுநிலை தவறாத தமிழ் நாளிதழ்



அகவை 24 இல் கால் பதிக்கும் நடுவுநிலை தவறாது நன்னெறி காக்கும் நாளிதழாக யாழ்ப்பாணத்து மக்களின் மனங்களில் இடம்பிடித்துள்ள நாளிதழ் வலம்புரிக்கு மாநகர முதல்வர் என்ற வகையில் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

உண்மைத்தன்மையோடும் ஊடக தர்மத்தோடும் செய்திகளை மக்களுக்குக் கொண்டு சென்று சேர்ப்பதில் வலம்புரிப் பத்திரிகையும் பெரும்பங்காற்றுகின்றது. தனியே செய்திகள். தகவல்கள் என நின்றுவிடாது மேலும் வாசகர்களைக் கவரும் நோக்கோடு விசேட அம்சங்கள் பலவற்றையும் உள்ளடக்கி வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்க ஒரு விடயம்.

வலம்புரிப் பத்திரிகையில் காலத்தின் தேவை கருதி சிறந்த சொல்லாடலுடனும். ஆழ்ந்த கருத்துக்களுடனும் வெளிவரும் ஆசிரியர் தலையங்கமே முதலில் தேடப்படுகின்றமை வலம்புரிக்கே உரித்தான தனித்துவம். தமிழ் மக்களிடம் தமிழ்த் தேசிய சிந்தனையை வளர்ப்பதிலும் அதனைக் காப்பதிலும் அன்று தொடக்கம் வலம்புரி காத்திரமான பங்காற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினையை வென்றெடுக்க வலம்புரி பத்திரிகை இதுவரை காலமும் ஆற்றிய சிறந்த பணியைப் போன்று இனி வருங்காலங்களிலும் தகவல்களை மக்களுக்கு கொண்டு சேர்க்கும் பணியை ஆற்ற வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன். வலம்புரியினால் முன்னெடுக்கப்படும் புதிய முயற்சிகள் சிறக்கவும் நீண்டகாலம் தனது பணியைத் தொடரவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**வி. மணிவண்ணன், முதல்வர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

## வலம்புரியே பல்லாண்டு வாழி...




எமது தமிழ் மக்களின் ஒலியாக ஓங்கி ஒலித்திடும் வலம்புரி நாளிதழ் அகவை 24 இல் தடம் பதிக்கின்றமையையிட்டு மகிழ்ச்சியடைகிறோம். தமிழ் மக்களின். சைவசமய மக்களின் உள்ளக்கிடக்கைகளை. அபிலாஷைகளை செய்தியாக. கட்டுரைகளாக. நற்சிந்தனைகளாக. கதைகளாக. ஆசிரியர் தலையங்கமாக நாள்தோறும் பல்வேறு வடிவங்களில் உலகிற்கும் மக்களிற்கும் சொல்லி வருகின்றது வலம்புரி. இன்றைய கால சூழலிலும் தனது வரவை தொடர்கின்றமை பாராட்டுக்குரியது.

தமிழ் மக்களின் அவரவர் பருவத்திற்கு ஏற்றாற் போல சிறுவர் பகுதி. மருத்துவம். அரசியல். ஆலடி மாநாடு. ஆய்வுக் கட்டுரைகள். தொடர்கதைகள். முகநூல் பகுதி. சமயப்பகுதி எனப் பலவகையிலும் மக்களைத் தன் வசப்படுத்தியுள்ளது. வலம்புரி தனது வயதிற்கு ஏற்ப வளர்ச்சி கண்டுள்ளமை சிறப்பு. 24 ஆவது அகவை நாளில் இன்னும் பல்லாண்டு காலம் தமிழ் மக்களுக்கு நற்பணியாற்றிட எல்லாம் வல்ல இறையை பிரார்த்தித்து நல்லாசி கூறி வாழ்த்துகிறோம்.

**ஸ்ரீமத் வேதவித்தியாசாகரர்,**
**எட்டாவது குருபீடாதிபதி,**
**ஸ்ரீசிவகுருநாத குருபீடம்.**

## தமிழ்ச்சமூகத்தை நடுவுநிலையுடன் வழிநடத்தும் வலம்புரி



"தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" எனும் மகாகவியின் கூற்றிற்கு இணங்க தமிழ் மொழியின் சிறப்பினையும் தமிழர் நம் இருப்பையும் நிலை நிறுத்துகின்ற நோக்கிலே ஈழ மண்ணில் இருந்து தமிழ் பேசும் மக்களின் தனிப்பெரும் குரலாக ஒலித்துக் கொண்டிருக்கும் தமிழ் நாளிதழ்களில் ஒன்றான வலம்புரி சமுத்திரம் போன்ற ஆழமான பல தடைகளை தகர்த்தெறிந்து தனது வெற்றிப் பயணத்தில் பத்திரிகைத் துறையில் புதியதோர் அத்தியாயம் ஆகிய இருபத்து நான்காம் ஆண்டில் காலடி பதிப்பதை முன்னிட்டு மலரவுள்ள சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமிதமும் பூரிப்பும் அடைகிறேன்.

இன்றைய 21 ஆம் நூற்றாண்டிலே ஆதிக்கம் செலுத்துகின்ற இணையத்தளங்கள் மற்றும் ஏனைய சமூக வலையமைப்புக்களினூடாக மிக வேகமாக செய்திப் பரிமாற்றம் இடம்பெறுகின்ற போதிலும் ஒவ்வொரு தமிழ்ச் சமூகத்தினரிடையேயும் செய்திகளை சொல் வடிவிலே சுமந்து செல்கின்ற ஆற்றல் பத்திரிகைகளுக்கேயுரியதெனலாம். இன்றைய காலகட்டத்தில் மக்களுக்கு தகவல்களை வழங்கும் அளப்பரிய பணிகளை ஆற்றுவதில் பத்திரிகைகள் பெரும்பங்கு வகிக்கின்றன. அவ்வகையில் மக்களுக்குள்ள தகவலறியும் உரிமை சுதந்திரம் போலவே நியாயமானதும் சமநிலைத்தன்மையுடையதுமான செய்திகளைத் துல்லியமாக ஆராய்ந்து வழங்குவது பத்திரிகைகளின் தலையாய பொறுப்பாகும். அத்தோடு அகிலமெங்கும் அன்றாடம் இடம்பெறும் நிகழ்வுகளை செய்திகளாக்கி அவற்றை மக்களிடையே கொண்டு சென்று அவர்களை அறிவுள்ள ஆரோக்கியம் மிக்க சமூகமாக மாற்றுகின்ற குறிக்கோளுடன் வீறுநடை போடுகின்ற பணியில் பத்திரிகைகள் ஈடுபடுகின்றன எனக் கூறின் அது மிகையாகாது.

கருத்துச் சுதந்திரமானது சனநாயகத்தின் அத்திபாரமாகவும் அடிச்சுவடாகவும் அமைந்துள்ளது. இதன் பின்னணியில் வலம்புரி நாளிதழானது தமிழ்ச் சமுதாயத்தை நடுவுநிலையுடன் வழிநடத்தவும் அறிவு. ஆற்றல். ஆளுமையை வளர்த்திடவும் சனநாயக விழுமியங்களை அடியொற்றி தொடர்ந்தும் வெளிவர வேண்டுமென வாழ்த்தி நிற்பதோடு அனைத்து சமூகங்களின் மத்தியிலும் சமாதானம் மற்றும் சகவாழ்வை கட்டியெழுப்புவதற்காக இந்நாட்டின் ஐக்கியம். நேர்மைமிகு பண்பு. சுபீட்சம் மற்றும் சமாதானம் என்பவற்றை ஊக்குவித்து தமிழ் பேசும் மக்களின் மனதில் நீங்கா இடம் பிடிக்க வேண்டுமெனவும் சேவைக்காகத் தொடர்ந்து பயணிக்கும் முகாமையாளர். இதழாசிரியர் உள்ளிட்ட ஊடகவியலாளர் குழுவிற்கும் எனது மனம் நிறைந்த நன்றிகளையும் நல்லாசிகளையும் அன்போடு வழங்கி நிற்கின்றேன்.

**க.விமலநாதன், மாவட்டச் செயலாளர்,**
**முல்லைத்தீவு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எட்டுத் திக்கும் உன் பணி தொடர வாழ்த்துகிறோம்"

# சாய்ராம்

பல்பொருள் அங்காடி

சங்கத்தானை சாவகச்சேரி.

" வலம்புரிக்கு நல்வாழ்த்துக்கள்"

# செந்தூர் களஞ்சியம்

85, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

உன்னதமான உன் பணி
உலகெங்கும் பரவட்டும்

# பூபாலசிங்கம் புத்தகசாலை

- பத்திரிகைகள்
- சஞ்சிகைகள்
- கதைப்புத்தகங்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- உயர்கல்வி பாடப் புத்தகங்கள்
- அனைத்துவிதமான காகிதாதிகள்

இவை அனைத்து தேவைகளுக்கும்
யாழ்நகரின் முன்னணி ஸ்தாபனம்



பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

" வலம்புரியே உன் புகழ் பரவட்டும்"

# கிரானந்தா கபே

521,B, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

மங்காத புகழோடு இன்றுபோல் என்றும் மிளிர வலம்புரியை வாழ்த்துகின்றோம்

# கல்கமுவ ஸ்ரோர்ஸ்

சகலவிதமான பலசரக்கு பொருட்களை
மொத்தமாகவும், சில்லறையாகவும்
மலிவாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

தொ.பே:- 021 222 0966
077 183 6625

இல.133/1, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

உள்ளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்

# காவியா தையலகம் அன் கேட்டீன்

Kavija Tailoring & Curtain

ஆண்களுக்கான அனைத்து வகையான ஆடைகளும்
மற்றும் கேட்டீன் வகைகளும், நவீன டிசைன் முறையில்
தைத்து பெற்றுக் கொள்ளக் கூடிய ஒரே இடம்

077 071 4118
உரிமையாளர் ஜீவா

புத்தூர் வீதி,
புன்னாலைக்கட்டுவன்.

பல தசாப்தங்களை கடந்தும் உன் சேவை தொடர வாழ்த்துகின்றோம்



# சிறி மீனாட்சி நகை அகம்

ஓடர் நகைகளை உத்தரவாதத்துடன்
அசல் 22 கரட் நகைகளைத்
தெரிவு செய்ய இன்றே நீங்கள்
நாட வேண்டிய இடம்.

இல.183, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 6109

24 ஆவது அகவை காணும் "வலம்புரி" முடிவிலா அகவை காண வாழ்த்துகின்றோம்

# மணியம் ஸ்ரோர்ஸ்

MANIUM STORES

நாளாந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள்,
சிங்கள, ஆங்கில கொழும்பு
பத்திரிகைகள் மற்றும் பாடசாலை
உபகரணங்கள்,காகிதாதிகள்

Kandy Road, Chavakachcheri
Tel: 077 902 4275

